


பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00




சுடர்10 திருவள்ளுவர் ஆண்டு 2026 வைகாசி 09 செவ்வாய்க்கிழமை (23 - 05 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 177

★ மீண்டும் யுத்தம் வரும் எனத் தெரிந்து

# சமாதான காலத்திலே ஆயுதங்களை வெளிநாடுகளில் இருந்து வாங்கினோம்!

## பகிரங்கமாக சந்திரிகா அறிவிப்பு

கொழும்பு. மே 23

விடுதலைப் புலிகள் மீண்டும் யுத்தத்தில் ஈடுபடுவர் என்பதை நாம் நன்கு அறிந்திருந்தோம். அதனால் நாங்கள் சமாதான முயற்சிகளை மேற்கொண்ட எட்டுமாத காலத்தில் எமது இராணுவத்தின் ஆற்றலைக் குறைக்க எந்த விதத்திலும் முற்படவில்லை; இராணுவத்திற்கு ஆட்களைச் சேர்த்தோம். கடந்த அரசு இராணுவத்திற்கு வழங்காத ஆயுதத் தளபாடங்களையும், உபகரணங்களையும் அக்கால கட்டத்தில் வெளிநாடுகளில் இருந்து பெற்று இராணுவத்துக்கு வழங்கினோம்.

— இவ்வாறு நேற்றிரவு தனது நாட்டு மக்களுக்கு பகிரங்கமாக அறிவித்தார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

தேசிய வீரர் தினத்தை ஒட்டி, நேற்று நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சி மூலம் உரையாற்றியபோதே, சமாதான முயற்சி நடைபெற்ற வேளையில் தமது அரசு சமாந்தரமாக இராணுவத் தயாரிப்பு வேலைகளிலும் ஈடுபட்டது என்ற உண்மையையும் வெளியிட்டார்.

அந்த உரையில் அவர் தெரிவித்த தகவல்களின் சுருக்கம் வருமாறு:-

தெளிவான திட்டத்துடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தோம்.

முதலில் யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையானவற்றை வழங்க நடவடிக்கை எடுத்தோம். இரண்டாவதாக விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தோம். மூன்றாவதாக அரசியல் தீர்வினைக் காண முயன்றோம்.

பலவேறு பொருள்கள் மீது விதிக்கப்பட்டிருந்த தடைகளை நீக்கினோம்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உதவும் முகமாக மீன்பிடித் தடையை நீக்கினோம், வட பகுதிக்கான ஆனையிறவு, சங்குப்பிட்டிப் பாதைகளைத் திறந்தோம். ஆனால் புலிகள் தடைகளை நீக்காத படியால் அப்பாதைகளை மக்கள் பயன்படுத்த முடியவில்லை.

விடுதலைப் புலிகளுடன் கலந்துரையாடி அவர்களின் திருத்தங்களை ஏற்று, வட பகுதிப் புனர் நிர்மாணத் திட்டங்களைத் தயாரித்தோம். அவற்றை கடந்த பெப்ரவரி மாதத்தில் ஆரம்பிக்கவிருந்தபோதிலும் தாங்கள் அவற்றை நிராகரிப்பதாக விடுதலைப் புலிகள் எழுத்து மூலம் தெரிவித்தனர். வட பகுதி மக்களுக்கு உணவுப் பொருள்கள், மண்ணெண்ணெய்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவின் உரையும் பிந்தியே ஒளிபரப்பு!

கொழும்பு, மே 23

அமைச்சரவைக் கூட்டங்களுக்கும் ஏனைய அரச கடமைகளுக்கும் வழக்கமாகத் தாமதமாக வரும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தொலைக்காட்சிப் பேச்சும் நேற்று அறிவித்த நேரத்துக்குப் பிந்தியே ஒளிபரப்பப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகா தொலைக்காட்சி மூலம் நேற்றிரவு 9.05 மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார் என நேற்றிரவு முதலில் ரூபவாஹினி அறிவித்தது.

இரவு 9 45 மணி வரை அந்த ஒளிபரப்பு இடம்பெறவில்லை அதன் பின்னர் ஜனாதிபதியின் உரை இரவு 10.20 மணிக்கு ஒளிபரப்பாகும் என ரூபவாஹினி அறிவித்தது. இரவு 10 மணி செய்திக்குப் பின்னர் 10 20 மணியளவில் ஜனாதிபதியின் உரை ஆரம்பமானது.

## திரியாயில் தாக்குதல் சிப்பாய் ஒருவர் பலி!

கொழும்பு, மே 23

திருமலை மாவட்டத்தில் திரியாய் பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

இரவு 8.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மையில் திரியாய் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 15 இராணுவத்தினர் கொல்லப்பட்டது தெரிந்ததே. [ஐ-4]

## யாழ். கடற்பகுதியில் ஆறு நீர்மூழ்கிகள்!

### இந்திய புலனாய்வுத்துறை தகவல்

கொழும்பு, மே 23

யாழ்ப்பாணத்துக்கு அருகே கடற்பகுதியில் ஆறு நீர்மூழ்கி கப்பல்கள் அவதானிக்கப்பட்டிருப்பதாக இந்திய மத்திய புலனாய்வுத்துறை இலங்கை அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளது

செய்தி ஏஜென்ஸி ஒன்று இத்தகவலை வெளியிட்டது.

நீர்மூழ்கி கப்பல்கள் கடலில் சஞ்சரிக்கின்றன என்பது தெரியவந்திருப்பதை அடுத்தே பாக்கு நீரிணைப் பகுதியில் இந்தியக் கடற்படையின் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளிடம் பலம் வாய்ந்த — மிக வேகமான — நவீன நீர்மூழ்கி கப்பல் ஒன்று இருப்பது அயல் நாடு ஒன்றின் கடற்படைக் கப்பலின் ஒலி வாங்கியால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏற்கனவே செய்தி வெளியாகியிருப்பது தெரிந்ததே. (ஐ-6)

## பலாலி படையினர் ஷெல் வீச்சு:

யாழ்ப்பாணம், மே. 23

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்றுமாலை 6 மணியளவில் சுமார் ஒரு மணி நேரம் சுற்றுப்புறப் பகுதிகளை நோக்கி அகோர ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஏழாலை வடக்கு, கட்டுவன், குப்பிளான், நவக்கிரி, குட்டியப்புலம், புன்னாலைக் கட்டுவன் பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்துள்ளன.

இதனால் ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை. சில இடங்களில் மக்கள் இடம் பெயர்ந்தனர்.

(ஐ-13 -15)

## இலங்கையில் சமரச முயற்சி எதிலும் ஆஸ்திரேலியா ஈடுபடவில்லை

### கொழும்பில் அந்நாட்டு அமைச்சர் மறுப்பு

கொழும்பு, மே 23

ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமரசம் செய்ய ஆஸ்திரேலியா முயற்சிக்கின்றது என்று அடிபட்ட செய்திகளை கொழும்பு வந்திருக்கும் ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் கரட் இவான்ஸ் மறுத்துள்ளார்.

இப்போதைய சூழ்நிலையில் ஆஸ்திரேலியா அல்லது வேறு ஏதேனும் மூன்றாவது தரப்பினர் இப்பிரச்சினையில் தலையிடக் கூடிய நிலை இல்லை என்றார் அவர்.

இந்தசமுத்திர நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை அதிகரிப்பது தொடர்பான ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக 8 நாடுகளுக்கு விஜயம் செய்யும் அவர், அந்த நாடுகளில் ஒன்றான இலங்கைக்கு நேற்று வருகை தந்தார். கொழும்பில் 24 மணி நேரம் தங்கியிருந்த அவர், அங்கிருந்து புறப்படுவதற்கு முன்னர் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் சமரசம் செய்யும் முயற்சியில் ஆஸ்திரேலியா ஈடுபட்டிருப்பதாகக் கூறப்படுவதையும் —

ஆஸ்திரேலியாவிடம் இராணுவ உதவிகளை ஸ்ரீலங்கா அரசு கோரியுள்ளது என்று வெளியான செய்தியையும்—

அவர் அடியோடு மறுத்தார்.

சம்பந்தப்பட்ட [illegible]

(6 ஆம் பக்கம் பார்க்க)

## துறைமுகத்தின் பாதுகாப்பு கடற்படையின் பொறுப்பில்

கொழும்பு, மே 23

விடுதலைப் புலிகள் கரும்புலித் தாக்குதல் நடத்தக் கூடும் என்று எச்சரிக்கப்பட்டிருப்பதை அடுத்து கொழும்பு துறைமுகத்தின் முழுப் பாதுகாப்பு பொறுப்பும் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக ''லங்கா தீப'' பத்திரிகை தெரிவித்துள்ளது.

துறைமுகத்தை சூழவுள்ள பிராந்தியத்தில் ஏற்கனவே விசேட பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேபோன்று விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் இருந்து கொழும்பு நகரின் கேந்திர பகுதிகளைப் பாதுகாக்கும் பொறுப்பு இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் 'லங்காதீப' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## அச்சுவேலியில் பாடசாலைகள் இயங்கவில்லை

அச்சுவேலி, மே. 23

மாணவர் வரவு இன்மையால் அச்சுவேலிப் பகுதியில் கடந்த சில நாட்களாக பாடசாலைகள் இயங்கவில்லை.

தொண்டைமானாறு பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கைகளால் அச்சுவேலிப்பகுதியில் பதற்றம் நிலவுகிறது.

அப்பகுதி மக்கள் இரவு வேளைகளில் வீடுகளில் தங்க [illegible]




"சப்பான உண்மையை அம்மையார் தன்ர வாயாலேயே சொல்லிப்போட்டா... !

## வடக்கில் இந்தியப்படை! கிழக்கில் இலங்கைப்படை!!

### இப்படியும் அரசுக்கு ஆலோசனை

கொழும்பு, மே 23

இந்திய அமைதிப் படையை அழைத்து, யாழ்ப்பாணக் குடாநாட்டை தற்காலிகமாக அவர்களிடம் ஒப்படைத்து விட்டு —

கிழக்கில் ஸ்ரீலங்கா படை முழுப் பலத்துடன் நின்று போராடி —

விடுதலைப் புலிகளை நசுக்கலாம்.

இதுவே சிறந்த வழியாகும்.

இவ்வாறு 'த ஐலண்ட்' பத்திரிகையின் வாசகர் ஒருவர் அரசுக்கு ஆலோசனை வழங்கி உள்ளார்.

ஸ்ரீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், இந்தியப் பிரதமர் நரசிம்மராவும் விடுதலைப் புலிகளின் கொலைப் பட்டியலில் இடம் பெற்றுள்ளார்கள் என்பதனை கூறுவதற்குப் புலனாய்வு தேவையில்லை —

அவ்வாறிருக்கையில் இந்தியப் படையும் எமது படைகளும் சேர்ந்து விடுதலைப்புலிகளையும் பிரபாகரனையும் அழித்தொழிக்க ஏன் இரு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பலில் பொருள்களை எடுத்து வரக் கட்டுப்பாடு?

கொழும்பு, மே 23

வடபகுதிக்கு கப்பல் மூலம் அத்தியாவசியப் பொருள்களை அனுப்புவதிலும் புதிய கட்டுப்பாடுகளை விதிக்க அரசாங்கம் முயற்சி செய்வதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தரை மார்க்கமாக — வவுனியா ஊடாக — லொறிகளில் பொருள்களை எடுத்து வருவதற்கு பலத்த கட்டுப்பாடுகளை விதித்திருக்கும் அரசு, அதே போன்ற நடவடிக்கையை கப்பல் மூலம் பொருள்களை அனுப்புவதிலும் பின்பற்ற முயற்சிப்பதா

[ 6ஆம் பக்கம் பார்க்க]

## ராவுக்கு எதிரான அணியினருக்கு சோனியாகாந்தி ஆதரவு

புதுடில்லி. மே 23

இந்தியாவின் ஆளும் காங்கிரஸ் கட்சிக்குள் நெருக்கடி தோன்றியிருக்கும் நிலையில் பிரதமர் ராவுக்கு எதிராகக் கிளம்பியிருக்கும் அதிருப்தியாளர்கள் குழுவுக்கு, முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் துணைவியார் சோனியா காந்தியின் ஆதரவு கிடைத்திருப்பதாகச் செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டிருக்கின்றன



இது பிரதமர் ராவுக்கு பலத்த அடியைக் கொடுக்கும் என்றும் விமர்சிக்கப்படுகின்றது.

இந்திரா காங்கிரஸ் கட்சியிலிருந்து திவாரி, அர்ஜுன் சிங் ஆகியோர் உட்பட அதிருப்தியாளர்கள் பிரிந்து செல்வதைத் தவிர்க்கவேண்டுமானால் கட்சித் தலைவர், பிரதமர் பதவி ஆகிய இரண்டில், — கட்சித் தலைவர் பதவியையேனும் நரசிம்மராவ் விட்டு விலக வேண்டும் என்று கடந்த வாரம் பிரதமர் ராவுக்கு சோனியாகாந்தி ஆலோசனை கூறினாராம்.

''ரைய்ஸ் ஓவ் இந்தியா'' பத்திரிகை இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.



கட்சித் தலைவர் பதவியை விட்டு விலகும்படி பிரதமர் ராவை அதிருப்தியாளர்கள் கோரியதும் —

அந்தக் கோரிக்கையை ஏற்க பிரதமர் ராவ் மறுத்ததை

[ 6ஆம் பக்கம் பார்க்க]

## சோனியாவுடன்மோதுவதை தவிர்க்கவே ராவ் விருப்பம்

புதுடில்லி, மே 23

சோனியா காந்தியுடன் நேரடியாக மோதுவது தம்முடைய அரசியல் எதிர்காலத்தையே குழிபறித்து விடும் என்பதை உணர்ந்துள்ள பிரதமர் நரசிம்மராவ், சோனியாவுடன் நேரடியாகக் கருத்து முரண்படுவதை தவிர்த்தே வந்திருக்கிறார் என செய்தி ஏஜென்சிகள் சுட்டிக்காட்டுகின்றன.

கட்சிக்குள் தோன்றியுள்ள அதிருப்தியாளர்களின் எதிர்ப்புக் குறித்து அதிகம் கவலைப்படாத பிரதமர் ராவ், சோனியா காந்தியுடன் முரண்படுவது குறித்து அஞ்சுவதாகவும் கூறப்படுகின்றது

சோனியாவுடன் மோதுவது [illegible]த்தைத் தரும் என்பதை பிரதமர் ராவ் உணர்ந்திருந்தாலும், பிரதமர் என்ற முறையில் தமது கௌரவம், அதிகாரம் ஆகியவை பாதிக்கப்படாத வகையில் எவ்வளவு தூரத்துக்கு ராவினால்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் ராவின் திட்டம்:

### நெருக்கடியைச் சமாளிக்க அமைச்சரவையில் மாற்றம்

புதுடில்லி மே 23

அதிருப்தியாளர்கள் கூட்டமாகப் பிரிந்து சென்றிருப்பதை அடுத்து, தமது இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்டிருக்கும் பலவீன நிலையைச் சமாளிப்பதற்காக தமது அமைச்சரவையை மாற்றியமைக்க இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் முடிவு செய்திருக்கிறார்.

இவ்வாறு செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

அனேகமாக அடுத்த மாத நடுப்பகுதியில் அமைச்சரவை மாற்றம் இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் நெருங்கிய நண்பர்

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய பாதுகாப்பு சூழலில் தாக்கம் ஏற்படுத்தும் புலிகளின் ஏவுகணை

''புலிகளுக்கு ஏவுகணை கொடுத்தது யார் — இந்தியா எழுப்பும் கேள்வி'' என்ற தலைப்பில் புதுடில்லியில் இருந்து பாதுகாப்புத்துறை ஆய்வாளர் தினேஷ்குமார் எழுதி பி.பி.ஸியில் ஒலிபரப்பான கண்ணோட்டம் இங்கு பிரசுரமாகிறது.

இந்திய இராணுவ உளவுத் துறையில் தென்கிழக்காசியா இலங்கை ஆகியவற்றின் விவகாரங்களை கவனிக்கவென தனியான பிரிவு ஒன்று இருக்கிறது.

சென்ற ஏப்ரல் மாதம் கடைசிவாரத்தில் விடுதலைப் புலிகள் அடுத்தடுத்து இரண்டு ''அவ்ரோ'' விமானங்களை சுட்டு வீழ்த்திய பின் இந்த இராணுவ உளவுத் துறையின் முழுக்கவனமும் புலிகளின் ஏவுகணை எங்கிருந்து அவர்களுக்கு கிடைத்தது என்று அறியும் முயற்சியில் இறங்கின.

இந்திய விமானப் படையும், வேறு சில நாடுகளின் விமானப்படையும் 'அவ்ரோ' ரக விமானங்களை பயன்படுத்துகின்றன. எனபது மட்டும் அல்ல இதற்கு காரணம்.

இந்த ஏவுகணைகள் முதல் முறையாக இந்தியத் துணைகண்டத்தில் பறக்கும் விமானத்தைத் தாக்க பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதே அதற்கு முக்கிய காரணமாகும்.

இந்தப் பிராந்தியத்தில் இதுவரை ஆப்கானிஸ்தான் அமைப்பே ஏவுகணைகளை பயன்படுத்தியுள்ளது.

ஆனால் மிக உயர்ந்த திறன் மிக்க வெப்பம் தேடும் ''ஸ்ரிங்கர்'' ஏவுகணைகள் அமெரிக்க அரசு நிறுவனங்களால் ஆப்கானிஸ்தான் முஜாஹுதீன்களுக்கு கொடுக்கப்பட்டன.

அப்போதைய சோவியத் யூனியன் இராணுவத்தை எதிர்த்துப் போராடுவதற்காக அமெரிக்கா அவற்றை வழங்கியது.

ஆனால் ஆப்கானிஸ்தானில் இருந்து சோவியத் படைகள் விலகிய பின்னர் — நஜிபுல்லா அரசு வீழ்ந்த பின்னர் — தான் வழங்கிய 'ஸ்ரிங்கர்' ஏவுகணைகள் எவரிடம் உள்ளன என்பதை கண்டுபிடித்து அவற்றைத் திரும்பப் பெற்றுக்கொள்ள அமெரிக்க அரசு முயன்று வருகிறது.

ஆனால் அந்த முயற்சியில் அமெரிக்க அரசுக்கு சிறிதளவு வெற்றியே கிடைத்தது என்று கூறப்படுகிறது.

விடுதலைப்புலிகள் தரையில் இருந்துவானுக்கு செலுத்தக் கூடிய ஏவுகணைகளை பயன்படுத்தியிருப்பதால் இந்தியாவின் கவலை அதிகமாகியுள்ளது.

1980 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் இந்திய இராணுவம் இலங்கையில் விடுதலை புலிகளுடன் சண்டையில் ஈடுபட்டிருந்தது.

இதுவே விடுதலைப் புலிகள் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியை கொலை செய்யக் காரணமாக இருந்தது எனக் கூறப்படுகிறது.

இந்தியாவின்பலபிரமுகர்கள் விடுதலைப் புலிகளின் ''கொல்லப்பட வேண்டியயோர் பட்டியலில்'' இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இந்திய அரசு 1992] ஆம் ஆண்டு மே மாதம் விடுதலைப் புலிகள் இயக்கத்தை சட்டவிரோத இயக்கம் என்று தடைசெய்தது.

விடுதலைப் புலிகளிடம் இருந்து மட்டுமல்லாமல் இந்தியா காஷ்மீரில் பிரிவினைவாத வன்முறை, வடகிழக்கு மாநில கிளர்ச்சியாளர்களின் அபாயம், ஆந்திரப் பிரதேசத்தில் ''நக்ஸலைட்'' வன்முறை ஆகியவற்றையும் எதிர்நோக்குகிறது.

இந்தக் கிளர்ச்சிக் குழுக்களோடு விடுதலைப் புலிகளுக்கு சிறு தொடர்பு உண்டு என்று உளவுத் துறைச் செய்திகள் கூறுகின்றன.

இந்தக் குழுக்களில் பல சர்வதேச ஆயுதச் சந்தையுடன் ஏற்கனவே தொடர்பு கொண்டுள்ளன.

விடுதலைப் புலிகள் பயன்படுத்திய ஏவுகணைகள் ரஷ்யத் தயாரிப்பாக இருக்கலாம். என்றும் —

அவை ஆங்கானிஸ்தான் முஜாஹுதீன் குழுக்களிடம் இருந்து பெறப்பட்டிருக்கலாம் என்பதும் — உளவுத் துறையின் இப்போதைய கணிப்பாகும்.

உக்ரைனில் இருந்து அதிகார பூர்வமற்ற வழிகளில் இருந்தும் விடுதலைப் புலிகள் இவற்றைப் பெற்றிருக்கலாம். என்ற கருத்தும் இருக்கிறது.

2 மாதங்களுக்கு முன்னர் சட்டவிரோதமான ஆயுதங்களுடன் கப்பல் ஒன்று இலங்கையை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாக உக்கிரைன் அரசு இலங்கை அரசை எச்சரித்ததாக தகவல் வெளியானது.

ஆனால் அப்போது இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடன் அமைதிப் பேச்சில் ஈடுபட்டிருந்ததால் இலங்கை அந்த ஆயுதங்கள் இந்தியாவுக்கு எதிராக பயன்படுத்தத்தான் செல்கின்றன என்று கருதி இந்தியாவுக்கு எச்சரிக்கை செய்தது.

இதுவரை இந்தியாவில் உள்ள தீவிரவாதக் குழுக்கள் எவையும் தரையில் இருந்து விண்ணுக்கு செலுத்தும் ஏவுகணையை பயன்படுத்தியதில்லை

ஆனால் 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் காஷ்மீரில் கட்டுப்பாட்டு எல்லைக் கோட்டுக்கு அருகே சுப்பாரா மாவட்டத்தில் இந்திய ராணுவ ரோந்துப்படை ரஷ்யாவில் செய்யப்பட்ட எஸ்.ஏ.7 ஏவுகணையை கண்டுபிடித்தது

''எஸ் ஏ 7'' ஏவுகணைகள் திறனிலும், செயற்பாட்டிலும் விடுதலைப் புலிகள் பயன்படுத்திய ஏவுகணையைப் போன்றவையே.

இப்படிப்பட்ட நிலைமை இந்தியாவின் பாதுகாப்பு சூழலில் நேரடியான பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் இவற்றைக் கண்காணித்து வரவேண்டும் என்று பாதுகாப்பு அதிகாரிகள் கூறுகின்றார்கள்.

காஷ்மீரில் இராணுவ விமானங்களும், பயணிகள் விமானங்களும் தற்போது பறக்கும் போது தக்க முன் எச்சரிக்கை நடவடிக்கையுடன் பறக்கின்றன.

இராணுவ விமானங்களும், ஹெலிக்கொப்டர்களும் இரவு நேரத்தில் பறப்பதில்லை.

பறக்கும் போது பத்திரமான உயரத்தில் அதாவது குறைந்தது 5 ஆயிரம் அடி உயரத்தில் பறக்கின்றன.

[ஐ-!]

# இயற்கை உபாதையை கழிக்கக்கூட இராணுவம் அனுமதிக்கவில்லை

## விடுதலையானவர்கள் தகவல்

வடமராட்சி, மே 23

மூன்று தினங்களாக நாம் இயற்கை உபாதையைக் கழிக்க கூட அனுமதிக்கப்படவில்லை என பலாலி முகாமிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை விடுதலையான 5 பேரும் தெரிவித்தனர்.

சீவல் தொழிலுக்குச்சென்ற மூன்று சீவல் தொழிலாளர்களும பெரியவிளான் பக்கம் நடமாடிய இரு மாணவர்களும் இராணுவத்தால் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது தெரிந்ததே

ஐவரையும் பிடித்த இராணுவத்தினர் அவர்கள் அணிந்திருந்த சாரத்தைக்கிழித்து அவர்களது கண்ணைக்கட்டிவிட்டு முகாமுக்கு அழைத்துச்சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர்கள்மீது கடுமையான தாக்குதல்களை மேற்கொண்ட இராணுவத்தினர், அவர்கள் இயற்கை உபாதையைக் கழிக்க அனுமதி கேட்ட போது இங்கு (முகாமில்) மலகூடம் இல்லை என்று கூறினார்களாம்

பெரும் அவதிப்பட்ட அந்த ஐவரும் மூன்று தினங்களின் பின்னர், விடுதலையாகி கோமாரி கப்பலில் வரும் போது கப்பலில் தமது இயற்கை உபாதையைத் தீர்த்துக் கொண்டனராம்.

(ஒ-173)

# அனுமதியற்ற இறைச்சி விற்பனை கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், மே. 23

யாழ். குடா நாட்டின் பல இறைச்சிக் கடைகளில், தகுதி வாய்ந்த அலுவலரின் பரிசோதனைக்கு உட்படுத்தப்படாத ஆடு, மாடுகள் பிரதேச கொல்களங்களிலும், வேறு இடங்களிலும் அறுக்கப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருவதைத் தமிழீழ சுகாதார சேவைப் பகுதியினர் கடந்த வாரம் கண்டு பிடித்துள்ளனர்.

அவ்வாறு கால்நடைகள் அறுக்கப்பட்டு, விற்பனைக்காக வெளிக்காட்டி வைத்திருந்தமை, அனுமதி முத்திரையின்றி அறுத்த கால்நடைகளை கொண்டு சென்றமை பல அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நோயுற்ற அறுக்கத் தகுதியற்ற கால்நடைகளை இறைச்சிக்காக அறுப்பதனை தவிர்க்க — கால்நடைகளவாடலை நிறுத்த — தகுதி வாய்ந்த அலுவலரினால் பரிசோதிக்கப்பட்டு அனுமதி வழங்கிய முத்திரையிடப்படாத இறைச்சிகளை விற்பனை செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும்.

அத்துடன் முறைபாகக் குளிரூட்டப்படாது பழைய இறைச்சி வகைகள் விற்பனை செய்வது நிறுத்தப்படல் வேண்டும் என, தமிழீழ சுகாதார சேவைகள் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை தமிழீழ சுகாதார சேவைகள் பணியகத்தில் நடைபெற்ற யாழ் நகர் இறைச்சிக்கடை உரிமையாளர்கள் கலந்துரையாடலின் போது, மேற்படி விடயம் பொறுப்பாளரினால் வலியுறுத்தப்பட்டுள்ளது

[ஒ]

# மக்கள் நலன்புரி சங்க ஆண்டு விழா

யாழ்ப்பாணம், மே 23

மக்கள் நலன்புரி சங்கத்தின் 54 ஆவது ஆண்டு விழாவும், முதலுதவிச் சான்றிதழ் வழங்கும் வைபவமும் நாளை புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திரு. ஏ ஜெகதிஸ்வரன் நிகழ்ச்சிகளுக்குதலைமைவகிப்பார். பிரதம விருந்தினராக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் தலைவர் வைத்திய கலாநிதி சிங்கராயர் கலந்து கொள்வார்.

(ஐ)

# ஐ நா. சபை தினத்தின் 50 ஆண்டு நிறைவு நிகழ்வு

வலிகாமம், தெற்கு மே 23

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதி நடைபெற உள்ள ஐக்கிய நாடுகள் சபை தினத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்களையொட்டி —

ஐக்கிய நாடுகள் தகவல் மத்திய நிலையம், கல்வி, உயர்கல்வி அமைச்சின் உதவியுடன் நாடு முழுவதிலும் உள்ள சகல பாடசாலைகளிலும் பல செயற்பாடுகளை நடத்த ஒழுங்குகள் மேற்கொண்டு வருகிறது.

இதற்கென கடந்த 8 ஆம் திகதி தொடங்கி மே 26 ஆம் திகதிவரை அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா யாழ்ப்பாணம் மாவட்டங்களில் கற்பிக்கும் சமூகக்கல்வி ஆசிரியர்களுக்கு பயிற்சிக் கருத்தரங்குகள் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பாடசாலைகளில் கனிஷ்ட, சிரேஷ்ட மாணவர்களுக்கிடையிலான பேச்சு, கட்டுரை, சுவரொட்டி,சித்திரப்போட்டிகளை நடத்தவும் —

ஒக்டோபர் 22 ஆம் திகதியில் இருந்து 27 ஆம் திகதி வரை ஐக்கியநாடுகள் வாரம் அனுஷ்டிக்கவும் —

இக்காலப் பகுதியில் சிரமதானம், விசேட சமூகசேவைகள், அறிவுரைகள் நடத்தவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஒக்டோபர் 24 ஆம் திகதி கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் விசேட நிகழ்ச்சிகள் நடத்தவும் —

தேசிய ரீதியான போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கு ஜனாதிபதியினால் பரிசுகள் வழங்கப்படவும் உள்ளன.

இந்நிகழ்வுகளில் கூடிய பங்கேற்குமாறு பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்களுக்கு வடக்கு-கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு. க. தியாகராசா அறிவித்துள்ளார். [க-152]

# மருந்து விநியோகம்

சண்டிலிப்பாய், மே 23

வலி தென்மேற்கு பிரதேச சபையின் ஆனைக்கோட்டை உப அலுவலகத்தின் இலவச சித்த ஆயுள்வேத வைத்திய சாலைக்கு கடந்தவாரம் 65 ஆயிரம்ரூபா பெறுமதியான சித்தஆயுள்வேத மருந்து வகைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

மூன்றுமாத காலத்திற்கு தேவையான மருந்து வகைகளே விநியோகிக்கப்பட்டது எனவும் இவ்வைத்திய சாலையில் சிகிச்சை பெறவரும் நோயாளர் தொகை அதிகரித்துள்ளது எனவும் அறியப்படுகிறது. [க-135]

# பனடோல் தட்டுப்பாடு

சண்டிலிப்பாய், மே 23

யாழ். சுகாதாரத் திணைக்களத்தின் மாவட்ட மருந்துக் களஞ்சியத்தில் பனடோல் குளிசைகளுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் இப்பிராந்தியத்திலுள்ள பெரும்பாலான அரச வைத்தியசாலைகளில் பனடோல் குளிசைகளுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவுகின்றது. சில வைத்தியசாலைகளில் ''அஸ்பிரின்'' குளிசைகள் கையிருப்பில் இருப்பதால் பனடோலுக்கு பதிலாக நோயாளர்களுக்கு அஸ்பிரின் குளிசைகளே வழங்கப்பட்டு வருவதாக அறியப்படுகின்றது.

(க-135)

# விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கோரி யாழ். அரச அதிபருக்கு மகஜர்

சண்டிலிப்பாய், மே 23

வலி. தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் அண்மையில் பெய்த பெருமழையினாலும். வெள்ளத்தினாலும் சுமார் 20 ஆயிரம் ஹெக்டர் காணிகளில் பயிரிடப்பட்டிருந்த விவசாயிகளின் பயிர் வகைகள் முற்றாக அழிந்து போய் விட்டதால் அவர்களுக்கு நிவாரணமாக நஷ்ட ஈடு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு இவ்வாரம் அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் கட்டுடை சமூக அபிவிருத்தி கழகம் கோரிக்கை விடுத்துள்ளது.

கழகத்தலைவர் திரு க. முதலியாரினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்த மகஜரில் எதிர்பாராத இந்த வெள்ளத்தினாலும் பெரும் மழையினாலும் இப்பிராந்தியத்திலுள்ள விவசாயிகளினால் அதிகபிரயாசையுடனும் பொருட்செலவுடனும் விளைவிக்கப்பட்டு அறுவடைக்கு தயாராக இருந்த எள்ளு. பயறு, /ளல் போன்ற சிறு தானிய வகைகளும், வெங்காயம், புகையிலை, வெள்ளரி, மிளகாய், கத்தரி, வெண்டி ஆகியனவும் மிகவும் பாதிக்கப்பட்டு அழிந்து போய் விட்டன. இவர்களில் பலர் தங்கள் வீட்டு நகைகளை அடைவு வைத்து இந்த பயிர்ச் செய்கைக்கு முதலீடு செய்தனர்.

உணவு உற்பத்தியில் ஆர்வத்துடன் ஈடுபட்ட இந்த விவசாயிகளுக்கு அரசிடமிருந்து போதியளவு நஷ்ட ஈட்டையும் நிவாரணத்தையும் பெற்றுத் தந்தால் பேருதவியாக இருக்கும் என்று கழகம் தங்களை வேண்டிக் கொள்கின்றது'' என்று மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-135)

## உதவிப் பணம்

வலி. தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் மாதாந்த பொதுசன உதவிப்பணம் பெறுபவர்களுக்கு சித்திரை மாதத்திற்கான உதவிப் பணம் இப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள தபால் அலுவலகங்கள் ஊடாக தற்போது வழங்கப்பட்டு வருகின்றது. இவர்கள் தத்தமது பகுதி தபால் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு இந்த உதவிப் பணத்தை பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்படுகிறது. [க-135]

## புலிகளின் குரல் வானொலியில்

23 05 1995

செவ்வாய் இரவு

- ★ 8-02 — ஊர்சுற்றும் ஒலிவாங்கி
- ★ 8-10 — அறிந்து கொள்ளுங்கள்
- ★ 8-20 — நலந்தானா? - ''மூட்டுக்களில் ஏற்படும் வலிகள்'' பற்றி வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் ஆலோசனை
- ★ 8-30 செய்திகள்
- ★ 8-40 — கருத்துக்களம் — இ. இராஜேஸ்வரன் எழுதிய - ''முடிவுகள்''
- ★ 8-50 — மலரும் மொட்டுக்கள்

24 — 05 — 1995

புதன் காலை

- ★ 7-02 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

செவ்வாய் மாலை

- ★ 5-01 — சிந்தனைத் திறல்
- ★ 5-02 — எழுச்சிக் கீதம்
- ★ 5-10 புதியவை
- ★ 5-15 — தமிழிசை
- ★ 5-30 — வானொலி மதியூகம்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02 — இவ்வாரம் இவர்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — என் தெரிவு

# லெனின் உடலிலிருந்து மர்ம சக்தி?

மொஸ்கோ, மே 23

கம்யூனிஸ்ட் ரஷ்யாவின் ஸ்தாபகரான லெனினின் உடல் வைக்கப்பட்டுள்ள காட்சியகத்தினுள் செல்வோர் மர்மமான ஒரு கடுஞ்சக்திக்கு ஆட்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மர்மசக்தி லெனினின் உடலில் இருந்தே வெளிப்படுவதாக ரஷ்ய [illegible] வெளியிட்டுள்ளது.

(-5)

# பிரச்சினைக்கு தீர்வு கூற மறுக்கும் அரசு உரிமைகளை வழங்குமா?

## புதுவை இரத்தினதுரை கேள்வி

வலிதெற்கு மே. 23

''இன்று எழுந்துள்ள பிரச்சினை தீர - தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வையுங்கள் எனக் கேட்டோம் தீர்வைச் சொன்னால் பிரச்சினை வரும் என சந்திரிகா அரசு கூறுகிறது பிரச்சினைக்கு தீர்வுத் திட்டத்தை கூற மறுக்கும் அரசு எமது உரிமைகளை வழங்கும் என எதிர் பார்க்கலாமா?

உடுவில் பிரதேச சபை அலுவலக திறந்த வெளியரங்கில் நடைபெற்ற இறுதி நாள் கலை விழாவுக்கு தலைமை வகித்து உரையாற்றிய விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை இவ்வாறு கூறினார்.

கலை விழா கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவுடன் வலி - தெற்கு பிரதேச கலை கலாசார பேரவையால் நடத்தப்பட்டது.

திரு. புதுவை இரத்தினதுரை மேலும் கூறியதாவது-

பல மொழிகளுக்கு எழுத்து வடிவம் உருவாக முன்பே நீண்ட இலக்கண இலக்கியங்களைக் கொண்டு விளங்கியது தமிழ். நீண்டகாலவரலாற்றுக்குரிய இனம் எமது இனம்.

உலகம் பூராவும் ஆறு கோடி தமிழ் மக்கள் வாழ்ந்தாலும் சொந்த நிலம் என கூறக்கூடிய நிலம் எதுவும் அற்ற இனம் அது.

வாழ்வா - சாவா என தமிழர் தீர்மானிக்க வேண்டிய காலம் இது.

பேச்சுவார்த்தை மேடையில் எமக்கு விடுதலை கிடைக்கப் போவதில்லை.

விடுதலை உணர்வு வருமானால் உலகத்து இராணுவம் ஒன்றாக வரினும் எதிர்த்து அவற்றை வெல்வோம் என்றார்.

முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாண மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி கூறியதாவது.

எமது விடுதலையை பெறுவதற்கான சரியான சூழ்நிலை இன்று உண்டு அதை திறம்பட நகர்த்த எமக்கு தேவைப்படுவது பெரும் படை.

சந்திரிகா அரசின் இராணுவ ரீதியான போக்கை சர்வதேசத்துக்கும் அம்பலப் படுத்துவது —

எமது மக்களுக்கு நேர இருந்த பெரும் அழிவில் இருந்து அவர்களை காப்பது —

விடுதலை உணர்வு கொண்ட இனத்திற்கு ஏமாற்றத்தையும் அழிவையும் கொடுத்தவர்களுக்கு பாடம் புகட்டுவது —

ஆகிய நோக்கங்களை முன் வைத்தே திருமலையில் கப்பல் தகர்ப்பையும் வடக்கே விமானத் தகர்ப்பையும் நிகழ்த்தினோம்.

நாம் சந்திரிகா அரசிடம் வழங்குவதாக ஒத்துக்கொண்ட எமது மக்களின் வாழ்வுக்கான வழிகளை செயல்படுத்தக் கூறினோம்.

பொருளாதாரத் தடை, பயணத்தடை அறிவிப்புக்கள் எமது மக்களின் வாழ்வுக்கு சந்திரிகா அரசால் போடப்பட்ட தடை.

இந்த நூற்றாண்டின் மிகக் கொடுமையான கொடூரங்களை தமிழினம் அனுபவித்து வருகிறது.

தமிழ் மக்களின் கழுத்தில் சுருக்கு போட்டு சாவுக்கு நேரமும் திகதியும் குறித்த சந்திரிகா அரசுக்கு இன்று நாம் சுருக்குப் போட்டுள்ளோம்.

படையும் பலமும் இல்லாத இனம் ஒரு தேசிய இனமாக மாட்டாது.

படையும் பலமும் கொண்ட தமிழ் தேசிய இனம் விடுதலையை விரைவில் பெற மக்களின் ஆதரவை நாடி நிற்கின்றது.

யாழ்ப்பாண மாவட்ட அரசியல்துறை மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி, சு. தணிகைச்செல்வி, கலை பண்பாட்டுக்கழக திரைப்பட பிரிவு பொறுப்பாளர் திரு. நா. பசுலவன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

(க-152)

# கலை விழா நடத்த முடிவு

வலி மேற்கு, மே 23

வலிகாமம் மேற்கு, கலாசாரப் பேரவையினர் மூன்று மாதத்துக்கு ஒரு முறை பௌர்ணமி தினத்தன்று கிராமங்கள் தோறும் கலை விழாக்களை நடத்துவதற்கு முடிவு செய்துள்ளனர்.

விழாக்களில் உள்ளூர்க் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளே கூடுதலாக இடம்பெறவுள்ளன. [க-175]

# பாடசாலைகளில்

அளவெட்டி தெற்கு றோ. க. த. க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திரு. ஐ மார்க்கண்டன் தலைமையில் நடைபெறும். (க)

# குழாய்க்கிணறு அமைக்க நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி, மே 23

பளைப்பிரதேசத்தில் உள்ள மூன்று பாடசாலைகளிலும் மற்றும் பளைப் பிரதேச செயலகத்திலும் குழாய்க் கிணறுகளை அமைப்பதற்காக இவ்வாண்டு பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் இரண்டு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன்படி பளை முகாவில் அ. த. க. பாடசாலை, இயக்கச்சி அ. த. க. பாடசாலை சோரன்பற்று அ. த. க. பாடசாலை ஆகிய பாடசாலைகளில் குழாய்க் கிணறுகள் அமைக்க தலா 50 ஆயிரம் வீதம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

(க-5-117)


தெல்லிப்பழை
மகாஜனக் கல்லூரி
இன்ரறக்ட் கழகத்தின்
5 ஆம் ஆண்டு
நிறைவு விழாவும்
''மகாஜனதீபம்''
மலர் வெளியீடும்
புதிய நிர்வாகசபை பதவியேற்பு வைபவமும்

இடம்: கல்லூரி பிரதான மண்டபம் (மருதனார்மடம்)
காலம்: 24-05-1995 புதன்கிழமை பிற்பகல் 2.00 மணி

பிரதம விருந்தினர்:
Rtn. E. சரவணபவன் [தலைவர், யாழ். றோட்டறிக்கழகம்]

சிறப்பு விருந்தினர்கள்;
திரு. பா. கபிலன் [மாணவர் அமைப்பு பொறுப்பாளர் - தெல்லிப்பழை, உடுவில்]
Rtn. திருநந்தகுமார் (செயலாளர், யாழ். றோட்டறிக்கழகம்)

இவ்வைபவத்திற்கு அனைத்து றோட்டறி, றோட்டறக்ட், இன்ரறக்ட் கழக அங்கத்தவர்களையும் நலன் விரும்பிகளையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இன்ரறக்ட் கழகம்
யா/ மகாஜனக் கல்லூரி

அன்பளிப்பு:
ஹரன் பல்பொருள் வாணிபம்
மானிப்பாய் வீதி, மருதனார்மடம்.
வாணி உணவகம்
மருதனார்மடம் சந்தி.
இலட்சுமி உணவகம்
காங்கேசன்துறை வீதி, இணுவில்.
[36767]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

நல்ல இன பன்றி, பன்றிக் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: அண்ணா பாம், இணுவில். (சி-1250)

திருநெல்வேலி, பலாலி றோட்டில் ஆலடிச் சந்திக்கும் பரமேஸ்வராச் சந்திக்கும் இடையில் சகல வசதிகளும் கொண்ட வீட்டுடன் ஒன்றே முக்கால் பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 293/1, பலாலிறோட், ஆலடிச் சந்தி. (36756)

சனன் இன பால் ஆடு முதலாம் ஈத்து, 25 நாட்கள், ஒரு கடாக்குட்டியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 55, சீனியர் லேன், கலட்டி வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் (36753)

**VENUS ANTENNA**

To View Rupavahini, Madras Programmes, Fixing Venus Antenna Repairing Antennas, Radios, T.V-Decks, Clocks and Watches Venus Dilka Watch and Radio Works 284: Stanley Road [Ariyakulam Junction] Jaffna. Branch, Kandy Road, Chavakachcheri (C 1351)


தமிழ் இளைஞர்கள் கண்டபடி கைது:

# மலையகக் கொந்தளிப்பு குறித்து ஆராய தொழிற் சங்கக் கூட்டம்

கொழும்பு, மே 23

மலையக தமிழ் இளைஞர்கள் கண்டபடி கைது செய்யப்படுவதனால் அங்கு ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு நிலையைத் தடுப்பதற்கான வழிவகைகளை ஆராயும் பொருட்டு, மலையக தொழிற் சங்கங்களின் கூட்டம் ஒன்றை கூட்டுவதற்கு பெருந்தோட்ட தொழில், பொது நிர்வாக நாடாளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் திரு. அதாவுட செனிவிரத்தின தீர்மானம் செய்துள்ளார்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு எம். எஸ். செல்லச்சாமியின் வேண்டுகோளை அடுத்தே இந்த கூட்டத்திற்கு ஏற்பாடாகி உள்ளது.

செல்லச்சாமி தமது வேண்டுகோளில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொலீஸ்மா அதிபர் ஆகியோர் கலந்து கொள்ளும் மாநாடொன்றை உடன் கூட்டி, மலையகத்தின் கொந்தளிப்பு நிலையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும்—

கண்டபடி மலையக இளைஞர், யுவதிகள் கைதாவதை தடுத்து நிறுத்த ஆவன செய்யுமாறும், பிரதி அமைச்சரை கேட்டிருந்தார்.

மலையகத் தோட்டங்களில் பொலீஸாரின் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன.

கொழும்பில் திடீர் திடீரென இளைஞர்கள் கைது செய்யப்படுவதனால் அங்கு தொடர்ந்தும் தங்கமுடியாமல் மலையக மக்கள் பலர் தத்தமது தோட்டங்களுக்குத் திரும்பி இருந்தனர்.

இவ்வாறு தோட்டங்களுக்கு திரும்பியவர்களும், புதிதாக வந்திருப்பவர்கள் என்று கூறி கைது செய்யப்படுகிறார்கள்.

இந்தக் கெடுபிடிகள் நிறுத்தப்படவேண்டும்; இதற்கு ஒரு முறை வகுக்கப்படவேண்டும் — இவ்வாறு செல்லச்சாமி மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-5)

# தமிழ் மாணவன் சாதனை

தென்மராட்சி மே 23

கடந்த ஏப்பிரல் மாதம் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்ற இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான தடகளப் போட்டிகளில் தமிழ் மாணவன் ஒருவர் 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் புதிய சாதனை நிலைநாட்டியுள்ளார்.

யாழ். ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவனும், பேராதனைப் பல்கலைக்கழக புகுமுகஆண்டு பொறியியல் பீட மாணவனுமான அருமைத்துரை அகிலன் என்ற மாணவனே 400 மீற்றர் தூரத்தை 50.7 செக்கனில் ஓடிமுடித்து புதிய சாதனை ஏற்படுத்தியவராவார்.

இச்சாதனை ஏற்படுத்தியதன் மூலம் ஜப்பானில் நடைபெறவுள்ள ஆசியநாடுகளுக்கான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பு அவருக்கு கிடைத்துள்ளதாக தெரியவருகிறது. (ஒ-117)

# விளையாட்டால் மாணவர் மனோதிடம் வளர்கிறது

## மிருசுவில் பங்குத் தந்தை உரை

''விளையாட்டுகள் மூலம் மாணவரின் மனோதிடம் வளர்கின்றது''.

கடந்த 9ஆம் திகதி நடைபெற்ற மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலய இல்ல மெய்வல்லுனர் போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட மிருசுவில் பங்குத் தந்தை அருட்திரு பீற்றர் துரைரத்தினம் இவ்வாறு கூறினார்.

இந் நிகழ்வு வித்தியாலய அதிபர் திரு. ஏ எஸ் ஏ. அலெக்சாண்டர் தலைமையில் நடைபெற்றது.

பங்குத் தந்தை மேலும் பேசுகையில் கூறியதாவது;

இப்பாடசாலையின் மைதானம் சிறிதாக இருந்ததால் போட்டியில் கலந்து கொண்ட மாணவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்த முடியாததை பார்க்க முடிந்தது. இப் பாடசாலைக்கென ஒரு நிரந்தர மைதானம் யாழ். மாவட்ட ஆயருடன் தொடர்பு கொண்டு அமைத்துத் தர என்னாலான முயற்சிகளை மேற்கொள்ளுவேன். ஒரு விளையாட்டு ரசிகனால் தான் விளையாட்டுத் துறையில் ஏற்படும் கஷ்டங்களை உணரமுடியும் என்றார்.

தென்மராட்சி கல்விக் கோட்ட உதவிப் பணிப்பாளர் யோ. யோன்பிள்ளை உட்பட பலர் உரையாற்றினர். (க-117)

# அன்பளிப்பு

வலி தென்மேற்கு [சண்டிலிப்பாய்] பிரதேச செயலர் பிரிவிலுள்ள இடம் பெயர்ந்தோர் அகதி முகாம்களிலுள்ள குடும்பங்களுக்கு அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் அலுமினியத்தினாலான சமையல் பாத்திரங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

# மழை, இடியுடன் சேர்ந்து ஷெல்களும் முழங்கின!

குருநகர், மே 23

நேற்று அதிகாலை இடி முழக்கத்துடன் மழை பெய்து கொண்டிருக்கையில் மண்டைதீவு அல்லைப்பிட்டி, வேலணைத்துறை பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் ஷெல் தாக்குதல்களை நடத்தினர். பரவலாக வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன.

இதனால் கரையோர மக்கள் பதற்றம் அடைந்தனர். தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் இடைநடுவில் கரையை வந்தடைந்தனர். (ஒ 51)

# வலி. மேற்கு பிரதேச செயலர் பணிப்புரை

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் திரு. கா சந்திரராசா உணவு விநியோகம், இலவச நிவாரண விநியோகம், மண்ணெண்ணெய் விநியோகம் ஆகிய விடயங்கள் தொடர்பாக கிராம உத்தியோகத்தர்களை ப.நோ.கூ. சங்கங்களுக்குச் சென்று மேற்பார்வை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணித்துள்ளார். விநியோகம் தொடர்பாக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் பொருள்களின் தரம் ஆகியவற்றை கவனிக்குமாறு கிராம உத்தியோகத்தர்களை அவர் கேட்டுள்ளார். [க-175]

# உப தபால் அதிபர்கள் இனி அரச சேவையாளர்கள்!

நாடு முழுவதிலும் உள்ள 3 ஆயிரத்து 491 உப தபால் அதிபர்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் அரச சேவையாளர்களாகக் கணிக்கப்படுவர்

டு த்தகலை வெகுசன தொடர்பு உல்லாச பிரயாண விமான போக்குவரத்து அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க தெரிவித்தார்.

அரச சேவையாளர்களாக கணிக்கப்படவுள்ள உப தபால் அதிபர்கள் ஊழியர் சேமலாப நிதி செலுத்துவதற்கும் உரித்துடையவர்கள் ஆவர்.

இதற்கென 6 கோடி 60 லட்சம் ரூபாவினை அரசு வழங்கும் எனறும் அமைச்சர் தெரிவித்தார் [ஒ-5]

# வேதம், ஆகமம் ஆகிய இரண்டும் இந்து நாகரிகத்தின் அடிநாதங்கள்

## பாராட்டு விழாவில் கலாநிதி நா. சுப்பிரமணியன் உரை

வலி. தெற்கு, மே 23

''வேதம், ஆகமம் ஆகிய இரண்டும் இந்து நாகரிகத் துறையின் அடிநாதங்கள். இத்தகைய இந்து நாகரிகம் ஒரு பாடமாக இங்கு தான் முதன்முதலாக உள்ளது''

கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றதையொட்டி அகில இலங்கை இந்து மத குருமார் ஒன்றியம் இணுவில் தர்மசாஸ்தா குருகுலம், யாழ் சிவானந்த குருகுலம் இணைந்து நடத்திய பாராட்டு விழாவில் பேசிய யாழ் பல்கலைக்கழக தமிழ்த் துறை முதுநிலை விரிவுரையாளர் திரு நா. சுப்பிரமணியன் இவ்வாறு கூறினார்.

யாழ் பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் யாழ் இந்துக் கல்லூரியில் மேற்படி வைபவம் கடந்த 13ஆம் திகதி நடைபெற்றது

கலாநிதி சுப்பிரமணியன் மேலும் பேசும் போது கூறியதாவது:

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இருபது ஆண்டுகளாக எமது சைவப் பாரம்பரியம் குறித்த ஆய்வுகள் இடம்பெற்றுள்ளன. வேத ஆகமங்கள் இரண்டுக்குமான இந்து அடிப்படை மரபுத் தொடர்புகள் நிறைய உண்டு. எமது மதம் குறித்த 21ஆம் நூற்றாண்டின் நவீன முன்னெடுப்புக்கான தேவைகள் இருப்பதால் அவ்வேளை பேராசிரியர் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும் என்று அவர் கூறினார்.

சிவஸ்ரீ ந. சர்வேஸ்வரக் குருக்கள் பேசும்போது கூறியதாவது:

ஆகம அறிவு ஆலயத்துடனும் இந்து நாகரிகத்துடனும் தொடர்புடையது எனவே சமய ஆகமக் கோட்பாடுகளை நன்கு தெரிந்தவர்களாக இருத்தல் அவசியம். பேராசிரியரின் பதவிச் சிறப்பும், ஆகம அறிவுக் கருத்துக்களும் எவலோரையும் நெறிப்படுத்துவனவாக அமைவதால் பல குருமார்களை உருவாக்கக் கூடிய தாபனமாக இந்து நாகரிகத்துறை அமையும் என நம்புகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

இலங்கை இந்துமத குரு பீடாதிபதி சிவ பிரம்மஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் பேசும்போது வேதங்கள், ஆகமங்கள், சிற்பசாஸ்திரம் ஆகியவற்றை ஆராய்ந்தும் பல ஆலயங்களில் காணப்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தும் இந்து நாகரிகத்துறைக்கு பேராசிரியர் கோ கோபாலகிருஷ்ணன் ஆற்றிய பணிகள் அளப்பில என்று கூறினார்.

ஐ. மகேஸ்வரக் குருக்கள், சாம சோமஸ்கந்த சர்மா, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, ந சர்வேஸ்வரக் குருக்கள், தா மகாதேவக் குருக்கள், வலி தெற்கு பிரதேசசெயலர் திரு ஆ மகாலிங்கம், பேராசிரியர்கள் பொன். பாலசுந்தரம் பிள்ளை, வி சிவசாமி, யாழ் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர்கள் திருமதி க. இராமநாதன், திரு மா. வேதநாதன். தமிழருவி திரு த சிவகுமாரன், ஆசிரிய ஆலோசகர்கள் கை. இராஜேஸ்வரக்குருக்கள், ம. ஜெயராம சர்மா உட்படப் பலர் பாராட்டுரை வழங்கினார்கள்.

பேராசிரியர் கோபாலகிருஷ்ணனுக்கு அனைத்து குருகுலங்கள் உட்பட பலர் பொன்னாடை போர்த்து மலர்மாலை சூடிக் கௌரவித்தனர்.

இந்துக்குருமார் ஒன்றியத்தின் வெளியீடான ''நவக்கிரக பூஜா விதானம், ''தைத்திரீய உபநிஷத்'' ஆகிய நூல் வெளியீடுகளும் இடம் பெற்றன. (க-111-152)


பேராசிரியர் அ. துரைராசா தங்கப் பதக்கங்கள்

மேற்படி பதக்கங்களை வழங்கும் பொருட்டு, 1995 ஆம் ஆண்டுப் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறவுள்ளோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பல்துறைத் திறமை வாய்ந்த பட்டதாரிகளுக்கான இப்பதக்கங்கள் கல்வியிலும், விளையாட்டிலும். ஏனைய சிறப்புச் செயற்பாடுகளிலும் மாணவர்கள் ஈட்டிய சாதனைகளை மதிப்பீடு செய்து வழங்கப்படும்.

முழுப் பல்கலைக்கழகத்துக்குமென ஒரு பதக்கமும் ஒவ்வொரு பீடத்துக்கும் ஒவ்வொன்றாக நான்கு பதக்கங்களும் வழங்கப்படும்

**விண்ணப்பப் படிவங்களை**

1. உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் திருநெல்வேலி
2. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, 20 உவாட் இடம், கொழும்பு - 7
3. யாழ்ப்பாணக் கூட்டுறவுச் சங்கம், இல 154 ஆட்டுப்பட்டித் தெரு கொழும்பு - 13 ஆகிய முகவரிகளில் பெற்றுக் கொள்ளலாம்.

நிரப்பிய படிவங்களை உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு 1995-06-15 ஆம் திகதிக்கு முன் கிடைக்குமாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

— பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
1995-05-19. [சி-1244]



இணுவில் அருள்மிகு
ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோயில்

**மகோற்சவ விஞ்ஞாபனம்**

| | | |
|---|---|---|
| 23 – 05 – 95 | செவ்வாய்க்கிழமை — | கொடியேற்றம் |
| 24 – 05 – 95 | புதன்கிழமை — | கைலாசவாகனத் திருவிழா |
| 28 – 05 – 95 | ஞாயிற்றுக்கிழமை — | மஞ்சத் திருவிழா |
| 31 – 05 – 95 | புதன்கிழமை — | சப்பறத் திருவிழா |
| 01 – 06 – 95 | வியாழக்கிழமை — | தேர்த்திருவிழா |
| 02 – 06 – 95 | வெள்ளிக்கிழமை — | தீர்த்தத்திருவிழா |
| 03 – 06 – 95 | சனிக்கிழமை — | பூங்காவனத் திருவிழா |

தினமும் இரவு 8-30 முதல் 9–30 வரை
திரு. ஆறு. திருமுருகன் B. A.
அவர்களால்
**"விநாயக புராணம்"**
எனும் பொருள் பற்றி தெய்வீக அருட் பேருரை நடத்தப்படும்.

இங்ஙனம்;
விழா உபயகாரர்கள்.
(86754)



உ
சிவமயம்

**திருமண அழைப்பு**

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான யுவ ஆண்டு வைகாசி மாதம் 11 ஆம் நாள் (25 - 05 - 1995) வியாழக்கிழமை முற்பகல் 8 24 - 9 20 வரையுள்ள இடப லக்கின சுபமுகூர்த்த வேளையில்,

எங்கள் சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**திலகராசா (திலக்)**
அவர்களுக்கும்

எமது சிரேஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**மைதிலி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருளால் திருமண வைபவம் சுதுமலை சிவன் கோயில் மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் அசமயம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து பணமகன் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: 26 - 05 - 1995 பிற்பகல் 3 மணியளவில் மணமகன் இல்லத்தில் விருந்துபசாரம் நடைபெறும்,

★ தங்கள் நல்வரவை நாடும் ★

திரு திருமதி தியாகராசா,
''திருப்பதி''
புளியடிச் சந்தை வீதி,
மானிப்பாய் தெற்கு.

திருமதி சண்முகராசா,
சுதுமலை தெற்கு.

இரு வீட்டாரின் அழைப்பு

[சி-[illegible]]


# 46ஆம் பிறந்ததின ஓராண்டு நினைவலைகள்



திருமதி
**தனலட்சுமி கோபாலகிருஷ்ணன்**

தோற்றம்: 02 – 06 – 1949
மறைவு: 02 – 06 – 1994

திதி: 23 - 05 - 1995

அம்மா உனைப்போலே ஒரு தெய்வம்
எங்கேயும் இல்லை அழுதே
அன்புக்கெல்லாம் உனைப்போலே ஒரு தெய்வம்
எங்கேயும் இல்லை அழுதே
நாம் வாங்கும் மூச்சும் நாம் பேசும் பேச்சும்
உனையே நினைத்திருக்கும்.

உங்கள் பிரிவைத் தாங்காது தவிக்கும் ஜீவன்கள்,

தாய்: மகேஸ்,
கணவன்: கோபாலகிருஷ்ணன்,
பிள்ளைகள்: செந்தில், சேகர் மது, கஜன், நங்கை,
தங்கை: இந்துமதி பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

''சத்திய வாசா'',
[illegible]
[illegible]

(36762)


**விக்னா கல்வி நிறுவனம்**
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**97 வர்த்தகப் பிரிவு**

✶ பொருளியல் ✶
திரு. லோகசிங்கம் 10-00 - 11-00

✶ வர்த்தகம் ✶
திரு. வரதன் 11 - 00 – 12 - 00

✶ கணக்கியல் ✶
திரு. கலைச்செல்வன் 8-00 – 9-00

✶ அளவையியல் ✶
திரு. விக்கி 9-00 – 10-00

★ அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
★ 95 A/L வகுப்புகளுக்கு பாடத்திட்டங்கள் முடித்து மீட்டல் செய்யப்படுகின்றன.
(சி-1409)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் தமிழீழம் எவரின் கட்டுப்பாட்டில் என்பது இப்பொழுது அரசுக்குப் புரிந்திருக்கும்

## கடற்புலிகள் சிறப்புத் தளபதி சூசை

வடமராட்சி, மே 23

தென் தமிழ் ஈழம் தனது கட்டுப்பாட்டின் கீழ் உள்ளதென அரசு கூறியதற்கு பதிலடி கொடுக்கு முகமாகவே மூன்றாம் கட்ட ஈழப்போர் தென் தமிழ் ஈழத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தென் தமிழ் ஈழம் எவரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது என்பது இப்போது ஸ்ரீலங்கா அரசுக்குப் புரிந்திருக்கும்.

செம்பியன்பற்று வடக்கில் திருமலை கப்பல் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்த கடற் கரும்புலிகள் மேஜர் தணிகைமாறன், கப்டன் கதிரவன், மதஷா, சாந்தா ஆகியோரின் 31 ஆம் நாள் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய கடற்புலிகளின் சிறப்புத் தளபதி திரு. சூசை இவ்வாறு கூறினார்.

கூட்ட மேடைக்கருகில் வடிவமைக்கப்பட்ட கப்பலில் நான்கு கடற் கரும்புலிகளின் உருவப்படங்கள் வைக்கப்பட்டு மாலைகள் சூட்டப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

கடற்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு வே. சிவம்பரசன் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன். தியாகம் ஈகைச் சுடரை ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோரும், போராளிகளும், கடற்கரும்புலிகளுக்கு மாலை சூடி அஞ்சலி செலுத்தினார்கள்.

இக் கூட்டத்தில் சிறப்புத் தளபதி திரு. த சூசை மேலும் பேசுகையில் கூறியவாவது:

### பதிலடித் தாக்குதல்

சந்திரிகா அரசோடு நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் போது தென்தமிழ் ஈழத்தில் எமது போராளிகள் ஆயுதங்களுடன் நடமாட அனுமதிக்கப்பட வேண்டுமென நாம் கோரிக்கை கேட்டிருந்தோம். அப்போது மூன்றாம் கட்டப் பேச்சு வார்த்தைக்கு வந்த இராணுவ பிரிகேடியர் பீரிஸ் யாழ்ப்பாணத்தில் முகாம்களுக்குள் முடங்கிக்கிடக்கும் இராணுவம் வெளியே வந்து நடமாடுவதற்கு நீங்கள் அனுமதி அளிப்பீர்களா? அதே போன்றதுதான் தென்தமிழ் ஈழம் எமது கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிறது எப்படி புலிகளை ஆயுதங்களுடன் நடமாட விட அனுமதிக்க முடியும் என அவர் கேட்டார். அரசு தென்தமிழ் ஈழம் தனது கட்டுப்பாட்டின் கீழ் உள்ளதே என்ற எண்ணத்துக்கு பதிலடி கொடுக்குமுகமாக இன்று நாம் கட்டுமுறிவு இராணுவ முகாமை அழித்துள்ளோம். பாதுகாப்பான திருமலை துறைமுகப் பகுதியில் பொலிசார் சுட்டுக்கொல்லப் பட்டார்கள் மற்றும் அம்பாறை மட்டக்களப்பு போன்ற பகுதிகளிலும் தொடர் தாக்குதல்களை நடத்தியுள்ளோம். இப்போது அரசுக்கு புரியும் தென் தமிழ் ஈழம் எவரின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிறது என்பது.

அத்துடன் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் அமுலில் இருந்தபோது தென் தமிழ் ஈழத்தின் படையினர் எம்மை நசுக்கிக் கொண்டிருந்தார்கள். திருமலைக் கடலில் 35 புலிவீரர்களையும் படகினையும் கடற்படையினர் கைது செய்து தடுத்துவைத்திருந்தார்கள். இவர்களை விடுவிக்குமாறு அரசிடம் கேட்டிருந்தோம். இதற்கு எவ்வித நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளவில்லை. இறுதியில் 36 மணிநேரத்துக்குப் பின்னர் உணவோ, நீரோ உட்கொள்ளாத நிலையில் அவர்கள் பிடியிலிருந்து தப்பித்து வந்தனர். அதுமட்டுமன்றி மட்டக்களப்பில் ஒரு புலி வீரன் பொலிஸாரால் தாக்கப்பட்டார். இதனை பொறுக்க முடியாது அவர் சயனைட் அருந்த நேரிட்டது. மன்னாரில் எமது ஆதரவாளர் ஒருவர் கொலைப்பட்டார் மற்றும் சிலாவத்துறை மன்னார் போன்ற கடல் பிரதேசங்களில் கடற்படையினரின் அட்டூழியங்களும் தொடர்ந்துகொண்டிருந்தன.

### கப்பல்களை அழித்தோம்

வட தென் தமிழீழப் பகுதிகளில் ஸ்ரீலங்கா அரசு மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளுக்கு திருமலை துறைமுகம் முக்கிய கடற்படைத் தளமாக இருந்தது. இங்குதான் யுத்தக் கப்பல்கள் தரித்து நின்று தமிழ் மக்கள் மீதான அழிவு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தன. வெற்றிலைக் கேணி - கட்டைக்காடு, தீவகம் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகள் இத் துறைமுகத்திலிருந்து கடற்படைக் கப்பல்களின் உதவியுடன் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் வடமராட்சி கடலோரப் பிரதேசத்தில் பல வீடுகள், சொத்துக்கள், மனித உயிர்கள் அழிக்கப்பட்டதற்கு திருமலை துறைமுகத்திலிருந்து வந்து தாக்குதல்களை நடத்திவிட்டுச் சென்ற கடற் படைக் கப்பல்களே காரணமாகும்.

### சூரய ரணசுறுவின் அழிவு வேலைகள்

எமது கடற் கரும்புலிகளால் அழிக்கப்பட்ட சூரய கப்பல் வடமராட்சிப் பகுதியின் அழிவுக்கும், ரணசுறு என்ற கப்பல் வெற்றிலைக் கேணி - கட்டைக்காடு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அழிவுக்கும் காரணமாக இருந்தன.

எமது கரும்புலிகள் எமது மக்களின் உயிருக்கும், சொத்துக்களுக்கும் அழிவை ஏற்படுத்திய இவ்விரு கப்பல்களையும் அழிக்க வேண்டும் என்ற எண்ணத்துடனேயே பல கப்பல்கள் தரித்து நின்ற மிகவும் பாதுகாப்பான திருமலை துறைமுகத்தினுள் இவ்விரு கப்பல்களையும் இனங்கண்டு அவைகளை நிர்மூலமாக்கினார்கள். இவ்விரு கப்பல்களும் எம் மக்கள் மீது புரிந்த அனர்த்தங்கள் பேரழிவுகளை கண்டுகொண்டதனால் எமது கடற் கரும்புலிகளின் மனதில் ஏற்பட்ட வடுக்கள்தான் இவற்றை நிர்மூலமாக்க வேண்டும் என்ற இலட்சிய மனோபலத்தை அவர்களிடம் வளர்த்து விட்டது.

1985 இல் இதே நீரடி நீச்சல் பிரிவு தாக்குதலின்போது சாதிக்க முடியாதவற்றை இன்று நாம் தலைவரின் வழிகாட்டலிலும், ஆலோசனையினாலும் சாதித்துள்ளோம். 1985 இல் காரைநகரில் இதே போன்ற தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போது இரண்டு புலிவீரர்கள் வீரச்சாவடைந்தார்கள். அவர்களில் ஒருவரான திருமலையைச் சேர்ந்த நிலோஜன் என்பவரின் பெயரிலும், காங்கேசன்துறையில் கடற்படைக் கப்பலை தகர்த்த அங்கயற்கண்ணியின் பெயரிலும் தற்போது ஆரம்பிக்கப்பட்ட நீரடி நீச்சல் பிரிவினரே திருமலைத்துறைமுகத்தில் தாக்குதல்களை மேற்கொண்டார்கள் இத் தாக்குதலினால் உண்டான தாக்கம் ஸ்ரீலங்காவை மட்டுமல்ல சர்வதேசத்தையே வியப்பிலாழ்த்தியுள்ளது.

### கூட்டமாக வரும் கப்பல்கள்

இச் சாதனைக்குப் பின்னர் இராணுவ முகாம்களுக்கு உணவுப் பொருள்களையும், ஆயுதங்களையும் விநியோகிப்பதற்கு தனித்து வரமுடியாது கூட்டமாக கப்பல்கள் வருவதை அவதானிக்க முடிகிறது.

எமது போராட்ட ஆரம்ப காலத்தின் போது இராணுவத்தின் மீது திடீர் தாக்குதல்களை நடத்திவிட்டு மறைந்து சென்றோம் இன்று அதே காலப்பாணியில் விமானங்கள் திடீரென ஒளித்து வந்து திடீர் தாக்குதல்களை நடத்திவிட்டு ஓடி ஒளியும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.

பேச்சுவார்த்தைக்கு வந்த சந்திரிகா அரசு உதவி வழங்கும் நாடுகளிடம் நிதியைப் பெறுவதற்காக எமது இனப்பிரச்சினையில் இழுத்தடிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்தது. அதனுடைய நோக்கம் உலக நாடுகளிடம் சமாதானத்தைக் காட்டி நிதியைப் பெறுவதாக இருந்தது. இனப்பிரச்சினையைத் தீர்க்கப்போவதாகக் கூறி 20 லட்சம் வாக்குகளால் வெற்றிபெற்ற சந்திரிகாவையும் இனவாதம் பற்றிக் கொண்டது.

இராணுவ அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரிகளை விட்டும், இராணுவத்தினர் முகாம்களை விட்டும் இன்று ஓடிக் கொண்டிருக்கிறார்கள். இத்தருணம் எமது இலக்கை அடைவதற்கு பொருத்தமான காலம். இத்தருணத்தில் நாம் அனைவரும் தலைவரின் வழிகாட்டலின்கீழ் இணைந்து போராடி எமது இலக்கை அடைய வேண்டும். எமது தேசிய தலைவரின் காலத்தில் தான் எமது மண்ணை மீட்டு இலக்கை அடைய முடியும். இதற்கு நாமனைவரும் தயாராக வேண்டும்.

—இவ்வாறு அவர் கூறினார்.

இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் உறுப்பினர் திரு. வே. பாலகுமாரன் கடற்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திரு. செ. இளையவன், மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம், கடற்புலிகளின் மகளிர் அமைப்பு பொறுப் பொறுப்பாளர் செல்வி அரசலா, மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் திருமதி நதி ஆகியோரும் உரையாற்றினார்கள். தமிழீழ இசைக் குழுவின் இன்னிசைக்கானமும், "அடம்பன் கொடி" என்ற நாடகமும் இடம்பெற்றன. [க-173]

# இந்தியக் காங்கிரஸ் சந்தித்த மூன்றாவது உட்கட்சி பிளவு

இந்திரா காங்கிரஸ் என்று அழைக்கப்படும் இந்திய காங்கிரஸ் கட்சியில் பெரும் பிளவு ஒன்று ஏற்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் அர்ஜுன்சிங் தலைமையிலான அதிருப்தியாளர்கள் தாங்கள் தான் கட்சி என்று பிரகடனம் செய்து முன்னாள் அமைச்சர் திவாரியைப் போட்டிக் காங்கிரசின் தலைவராகத் தெரிந்தெடுத்துள்ளார்கள்

திவாரி காங்கிரஸ் இந்திரா காங்கிரசின் தளத்தை உலுப்ப முடியுமா என்பது கேள்விக்குரிய விஷயமே ஆகும்.

1947 ஆம் ஆண்டு முதல் காங்கிரஸ் கட்சி 45 ஆண்டுகளாக இந்தியாவில் ஆட்சி புரிந்து வருகிறது 3 ஆண்டுகள் மட்டும் காலஞ் சென்ற மொரார்ஜிதேசாய் (சந்திரசேகர்) தலைமையில் எதிர்க் கட்சிகளின் ஆட்சி நடைபெற்றது.

இந்தப் பிளவும் காங்கிரசை அதிகாரத்திலிருந்து அப்புறப் படுத்துமா என்பது சந்தேகத்துக்கு உரியதே ஏனென்றால் காங்கிரசுக்கு எதிராக இந்திய நாடு முழுவதும் தழுவிய எதிர்க்கட்சி ஒன்று இப்பொழுது கிடையாது. மதவாத பாரதிய ஜனதாக்கட்சிதான் மிகப் பெரிய எதிர்க் கட்சியாக விளங்குகின்றது. அதற்கு 'அகில இந்திய அந்தஸ்துக்கு கிடையாது.

முழுக்க முழுக்க ஆட்டங் கண்டுள்ள இந்திய காங்கிரஸ் அதிகார ஆசனத்திலிருந்து விலகாமல் இருப்பதற்கு இந்தக் குறைபாடு, அதாவது காத்திரமான எதிர்கட்சியின்மை, ஒரு முக்கிய காரணமாக உள்ளது.

நரசிம்மராவ் ஒரு எரிமலையின் மீது இருக்கிறார். அவருடைய அரசாங்கம் எந்த நேரமும் விழலாம். மேமாதத்திலேயே இது நிகழலாம்" இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரும மேற்குவங்காள முதல் அமைச்சருமான ஜோதி பாசு புதுடில்லியிலிருந்து திரும்பிய போது கல்கத்தாவில் இவ்வாறு கூறியிருக்கிறார்.

உண்மையில், அதிகாரத்துக்கு வந்தது முதல், நரசிம்மராவ் அரசாங்கம் "நித்திய கண்டம். பூரண ஆயுசு" என்ற பாணியிலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறது.

நரசிம்மராவ் அரசாங்கத்திற்கு வெளிப் பிரச்சினைகள் மாத்திரம் அல்ல; அரசாங்கத்துக்கும் கட்சிக்குள்ளேயும் பெரிய பிளவுகளும் ஏற்பட்டுள்ளன.

அர்ஜுன்சிங், திவாரி ஆகிய அமைச்சர்கள் கட்சியிலிருந்தும் பதவிகளில் இருந்தும் வெளியேற்றப்பட்டுள்ளனர். அவர்கள் நரசிம்மராவ் தலைமைக்கு எதிராகப் பிரசாரம் நடத்தி வருகின்றனர்.

ஜவஹர்லால் நேரு, இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி காலத்தில் கூட்டுத் தலைமை இருந்தது எனவும் காங்கிரஸ் தலைவர்கள் மக்களிடம் சென்றார்கள் எனவும் நரசிம்மராவ் ஒரு சர்வாதிகாரியாக நடந்து கொள்கிறார் எனவும் ராஜீவ் காந்தி கொலை விஷயத்தில் குற்றவாளிகளைக் கூண்டுக்குள் கொண்டுவரவில்லை எனவும் அர்ஜுன் சிங் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுபோலவே, காலஞ் சென்ற அமைச்சர் மோகன் குமாரமங்கலத்தின் மகன் ரங்கராஜன் குமாரமங்கலம் அண்மையில் நாடாளுமன்றத்தில் வரவு- செலவுத் திட்டத்துக்கு 9 திருத்தப் பிரேரணைகளைக் கொண்டு வந்தார்.

இந்தப் பிரேரணைகளை சபாநாயகர் சிவ்ராஜ் பட்டீல் நேரத்தைக் காரணம் காட்டி, மாலை 6 மணிக்கு விவாதம் முடியவில்லை என்று கூறி வாக்களிப்புக்கு விடவில்லை.

வாக்களிப்புக்கு விட்டிருந்தால் நரசிம்மராவ் அரசாங்கம் தோற்றிருக்கும் சாத்தியப்பாடு அநேகமாக இருந்தது. தோற்றிருந்தால் ராவ் அரசாங்கம் பதவி விலக நேரிட்டிருக்கும்.

குமாரமங்கலம் தலைமையிலான உட்கட்சி அதிருப்தியாளர்கள் வரவு செலவுத் திட்டத்தில் பெரிய மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்று கோருகின்றார்கள்.

வறியவர்களுக்குக் கூடுதலான உணவு மானியங்கள், விவசாயிகளுக்குக் குறைந்த செலவில் மின்சாரம், குறைவான வருமான வரிகள் முதலியவற்றை அவர்கள் கோருகின்றார்கள். அவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை நரசிம்மராவுக்கு எதிராகப் பேரணி ஒன்றையும் நடத்தினார்கள்.

கட்சிக்கு உள்ளே ஏற்பட்டுள்ள பிளவுகளைப் பொருத்துவதற்கு ராவ் ஆதரவாளர்கள் ராஜீவ் காந்தியின் மனைவியான சோனியா

**- பாரதிநேசன் -**

காந்தியை அணுகியுள்ளார்கள்; கட்சியின் ஐக்கியத்தைக் காப்பாற்றும்படி அவரிடம் தஞ்சக்குரல் எழுப்பியுள்ளார்கள்.

கடந்த காலத்தில் மாநிலத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி அடுத்தடுத்துத் தோல்விகளைக் கண்டது.

இந்தியாவின் 27 ஆட்சிப் பிரிவுகளில் 12 ஆட்சிப் பிரிவுகளில்தான் காங்கிரஸ் ஆட்சியில் இருக்கின்றது.

மாநிலத் தேர்தல் தோல்விகள் ராவ் தலைமை மீதான அதிருப்தியை அதிகரிக்கச் செய்துள்ளன.

உட்கட்சிப் பிளவுக்குப் பின் தேர்தல்களில் காங்கிரஸ் தோல்வியைச் சந்தித்துள்ளது. ரணத்துக்கு மகாராஸ்டிர குஜராத் மாநிலங்களில் 100க்கு மேலான காங்கிரஸ் கட்சிக்காரர் சுயேச்சைகளாகப் போட்டியிட்டனர்.

நரசிம்மராவ் அரசாங்கம் வறியவர்களினதும் முஸ்லிம்களினதும் நலன்களைக் கைவிட்டுள்ளது என்று காங்கிரஸ் உட்கட்சி அதிருப்தியாளர்கள் கூறுகின்றார்கள்.

அயோத்தியில் மசூதி உடைக்கப்பட்டது போலவே அண்மையில் காஷ்மீரில் 15 ஆம் நூற்றாண்டு முஸ்லிம் ஆலயம் எரிக்கப்பட்டதும நரசிம்மராவ் அரசாங்கத்துக்கு புதிய பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது

காஷ்மீரில் முஸ்லிம் ஆலயம் எரிக்கப்பட்டதை ஒட்டி நரசிம்மராவ் அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்று இந்திய நாடாளு மன்றத்தில் எதிர்க்கட்சிகள் கோரிக்கை வைத்தன.

"இது ஒரு முடிவு எடுக்காத செயற்படாத, பலவீனமான அரசாங்கம். இந்த அரசாங்கம் எதுவும்செய்ய முடியாத அந்தர நிலையில் உள்ளது அது பதவி விலக வேண்டும்"

பிரதான எதிர்க்கட்சியான பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவர் அடல் பிகாரி வாஜ்பேய் இவ்வாறு நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்துபோது கூறினார்.

நரசிம்மராவுக்கு நாட்டிலும் கட்சிக்குளேயும் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் அவருடைய பிரதமர்ப் பதவியையும் கட்சித் தலைவர் பதவியையும் எவ்வாறு பாதிக்கும் என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

என்றும் அந்தரத்தில் தொங்கும் நாலு ஆண்டுகால நரசிம்மராவ் ஆட்சியின் கதியுடன் நாற்பத்தைந்து ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியின் கதியும் இல்லாமற்போய்விடலாம் [illegible]

# தமிழ் அரச ஊழியர்கள் கண்டபடி தாக்கப்பட்டனர்

மட்டக்களப்பு, மே 23

கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பு, வவுணதீவு, கன்னன்குடா ஆகிய இடங்களில் கடமையாற்றி விட்டுத் திரும்பிய கூட்டுறவுச்சங்க, பிரதேச கல்வி அலுவலக ஊழியர்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோர் வவுணதீவு சோதனைச் சாவடி பொலீஸாரினாலும், இராணுவத்தினராலும் கண்டபடி தாக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை இப்பகுதியில் நடந்த அதிரடித் தாக்குதல் ஒன்றின் போது பல காவலரண்கள் அழிக்கப்பட்டதுடன், பொலீஸ் மற்றும் இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.

இதற்குப் பழிவாங்கும் முகமாகவே மேற்படி ஊழியர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

இதனை அடுத்து ஊழியர்கள் எவரும் மறுநாள் தமது கடமைகளுக்குச் சமூகமளிக்கவில்லை.

அதனால், வவுணதீவு பிரதேசசெயலகம், பிரதேச சபை, பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் என்பன மூடப்பட்டுக்கிடந்தன. (ஐ-5)

## எபோலா வைரஸ் தாக்கம்:

# கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு எச்சரிக்கை

கொழும்பு, மே 23

எபோலா வைரஸ் தாக்கம் குறித்து சுகாதார அமைச்சு, கட்டுநாயக்கா விமான நிலையத்தை உஷாராக இருக்கும்படி எச்சரித்துள்ளது.

ஸயர் நாட்டில் இருந்தும் ஆபிரிக்க நாடுகளிலிருந்தும் இலங்கைக்கான நேரடி விமானப் போக்குவரத்துகள் எதுவும் இல்லை. ஆயினும் ஸயர் நாட்டில் தங்கிவரும் விமானங்கள் பற்றியும் எச்சரிக்கையாக இருக்கும்படி சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

எபோலா வைரஸ் நெருக்கிய தொடர்புகளால்— இரத்த, உடல் தொடர்புகளால்— மட்டுமே தொற்றுதல் அடைகின்றது என்றும் தற்செயலான தொடர்புகளால் இது ஏற்படுவதில்லை என்றும் அங்கிருந்துவரும் அதிகார பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ-14)

## தலைநகர் கொழும்பில்

# அரச அலுவலகங்களில் பாதுகாப்பு அதிகரிப்பு!

கொழும்பு, மே 23

கொழும்பில் உள்ள அரச திணைக்களங்களின் அலுவலகங்களுக்கு கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதிகமாக மக்கள் கூடும் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு. பாஸ்போர்ட் அலுவலகம், ஆட்பதிவுத் திணைக்களம், உணவுக் கட்டுபாட்டுத் திணைக்களம் போன்றவற்றில் கூடுதலான பொலீஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அந்தத் திணைக்களங்களுக்கு செல்வோர் கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

அவற்றுக்குச் செல்லும் தமிழர்கள் மணிக்கணக்கில் தடுத்து வைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

# 5 இளம் தமிழ்ப் பெண்கள் வவுனியாவில் கைதாகினர்

## ஒருவர் தொடர்ந்து காவலில்

வவுனியாவுக்கு அருகே தோணிக்கல் என்ற இடத்தில் ஐந்து தமிழ் இளம் பெண்கள் பொலீஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

விசாரணையின் பின்னர் நால்வர் விடுக்கப்பட்டனர். ஒரு யுவதி தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இப் பெண் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட ஐந்து பெண்களும் வவுனியாவில் உள்ள ஆடைத்தொழிற்சாலை ஒன்றில் தொழில் புரிபவர்கள் ஆவர். தகவல் ஒன்றின் பேரிலேயே பொலீஸார் அவர்களைக் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. [ஐ]

### தொண்டமானாறு தபாலகம் வல்வையில்

இராணுவ நடவடிக்கை காரணமாகதொண்டமானாறு தபாலகம் வல்வெட்டித் துறைக்கு இடமாற்றப்பட்டுள்ளது.

மேற்படி தபாலகம் வல்வெட்டித்துறை தபாலகத்தில் தற்காலிகமாக இயங்கி வருகிறது (ஒ-155)

### அதிபர் கூட்டம்

பருத்தித்துறை. மே 23

கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி ஆகிய கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு. புலோலி மெ. மி. த. க. பாடசாலையில் கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி தலைமையில் நடைபெறும்.

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் திரு. சுந்தரம் டிவகலாலாவும் கூட்டத்தில் கலந்து கொள்கிறார். பாடசாலைகளின் பௌதிக தேவைகள், ஆளணித் தேவைகள் மற்றும் விளையாட்டு உபகரணத் தேவைகள் பற்றிய விபரங்கள் திரட்டப்படவுள்ளதாகத் தெரிகிறது. (ஒ-118)

★ ★ ★

தென்மராட்சி, மே 23

தென்மராட்சி கல்விக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்களின் கூட்டம் நாளை புதன்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் யாழ். கல்வி வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தனும் கலந்து கொள்கிறார். (ஒ-117)

### இலவசமாக இசைப் பயிற்சி

தென்மராட்சி, மே 23

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தில் இலவச இசைப் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டு வருகிறது.

சங்கீதம், வயலின், மிருதங்கம், இற்றார் போன்ற இசைப் பயிற்சி வகுப்புகள் இசை ஆசிரியை திருமதி சு. தங்கமலரால் நடத்தப்பட்டு வருகிறது. (ஒ 117)

### வெள்ளி விழாவை முன்னிட்டு நூல் அன்பளிப்பு

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம வெள்ளி விழாவை ஒட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகாவித்தியாலயத்துக்கும் — ஜூன் மாதம் 9 ஆம் திகதி யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கும் நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட உள்ளன.

ஜூன் 12 ஆம் திகதி திங்கட்கிழமை சேவாச்சிரமத்தில் இன்னிசை நிகழ்வும் இடம் பெறும். (க-14)

## பண்டிதர் குடியிருப்பில்

# 210 மாணவர்களுக்கு தினமும் போஷாக்கு உணவு

தென்மராட்சி, மே 23

கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் உள்ள பாலர் பாடசாலைகளில் கல்வி பயிலும் 210 மாணவர்களுக்கு பச்சிலைப்பள்ளி புனர்வாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினர் தினமும் போசாக்கு உணவுகளையும் பாலும் வழங்கி வருகின்றனர்.

இந் நிறுவனத்தினர் பச்சிலைப்பள்ளிப் பகுதியில் உள்ள போசாக்கு குறைந்த பிள்ளைகளுக்கு போசாக்கு உணவுகளும் ஊட்டச்சத்து பானங்களும் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

## இனப்பிரச்சினை அணுகுமுறை:

# சிங்கள பத்திரிகைகள் அரசைக் கண்டிக்கின்றன

கொழும்பு, மே 23

இனப்பிரச்சினை விடயத்தில் அரசின் அணுகுமுறையை கண்டித்து சிங்கள வாரப்பத்திரிகைகள் கருத்து வெளியிட்டுள்ளன

இனப்பிரச்சினை விடயத்தில் அரசின் நிலைப்பாட்டைக் கண்டித்துள்ள "ஹிரு" பத்திரிகை, பத்திரிகையாளர்கள் சுதந்திரமான கருத்துக்களை வெளியிடுவதற்குரிய உரிமைக்கு குந்தகம் விளைவிக்கக் கூடாது என்றும் கூறியுள்ளது.

அமெரிக்க யுத்த ஆலோசகர்கள் குறித்து அரசுக்கு நம்பிக்கை இல்லாததாலேயே இஸ்ரேல் யுத்த ஆலோசகர்களைப் பெற அரசு ஏற்பாடு செய்துள்ளது என்றும் அப்பத்திரிகை கூறியுள்ளது.

"ஏற்றுக் கொள்ளத்தக்க அரசியல் தீர்வுக்கான ஆலோசனைகளை அரசு சமர்ப்பிக்கும் வரை யுத்தத்திற்கு வெளிநாட்டு உதவி கிடைக்காது எனக் கூறியுள்ள 'யுக்திய" பத்திரிகை, யுத்தம் சம்பந்தமான உண்மை நிலையை மக்களிடம் இருந்து மறைக்க அரசு முயல்கிறது என்று குற்றம் சாட்டியுள்ளது.

"விடுதலைப் புலிகளின் யுத்த பலத்தை குறைவாக மதிப்பிட்டு அரச படையினர் போருக்கு தயாராகியுள்ளனராயினும், நாட்டில் தோன்றியுள்ள ஸ்திரமற்ற தன்மை குறைவதற்கு பதிலாக மேலும் விரிவடையும் என்று "ராவய" பத்திரிகை கூறியுள்ளது. (ஒ-3-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இறுதிப் போர்?

பெரும் போர் ஒன்றுக்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் தயாராகிக் கொண்டிருக்கிறது. வெளிநாடுகளில் இருந்து கப்பல் கப்பலாக, விமானம் விமானமாக, நவீன போர்க் கருவிகள் கொண்டு வந்து குவிக்கப்படுகின்றன.

படைகளுக்குப் புதிது புதிதாக ஆளணி திரட்டப்படுகிறது. டாங்கிகள், கப்பல்கள், விமானங்கள் என்று பெரும் பணச் செலவில் போர்த் தளபாடங்களும் கொள்வனவு செய்யப்படுகின்றன.

இராணுவத் தளபதிகளின் மட்டங்களில் அதிவேகமாக மாற்றங்கள் செய்யப்படுகின்றன. பெரும்படை எடுப்புக்கான சகல ஆயத்தங்களும் செய்யப்படுகின்றன.

எதிரி நாட்டின் இராணுவ பலத்துக்கு ஈடுகொடுக்க முடியாத நாடு ஒன்று, வேற்று நாடுகளிடம் இராணுவ உதவி கேட்பது போல, தமிழர்களுக்கு எதிராகப் போர் நடத்துவதற்கு வெளிநாடுகளின் உதவியையும் ஸ்ரீலங்கா அரசு நாடியுள்ளது.

விடுதலைப் புலிகளையும் தமிழர்களையும் பிரித்துக் காட்டி, புலிகளுக்கு எதிரான பெரும் போர் என்று கூறித் தமிழர்களை இனப்படுகொலை செய்து பூண்டோடு அழிக்கும் [Annihilate] நடவடிக்கையே இது என்பதில் எவ்வித சந்தேகத்துக்கும் இடம் இருக்க முடியாது!

தமிழர்களையும், விடுதலைப் புலிகளையும் பிரித்துக்காட்டி இனப்பிரச்சினையைத் தீர்ப்பது என்ற அணுகுமுறை, ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் கடந்த பதினேழு வருடங்களாக தோல்விகண்ட ஒன்று. அது போரைத் தீவிரப்படுத்தியதே அன்றி இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு சதவீதமேனும் உதவவில்லை.

நடுவு நிலைமை நின்று பார்ப்போரும், நியாய சிந்தையுடையோரும் இதனை நன்றாக உணர்கிறார்கள்; எடுத்துச் சொல்லுகிறார்கள்.

ஆனால் சந்திரிகா ஓர் அரசியல்வாதி என்பதால், சமாதானத்தை உருவாக்குவதற்கு மக்கள் ஆணை பெற்றுப் பதவிக்கு வந்தபோதிலும் அதனை உணர்ந்து கொள்ளாதவராகக் காட்டிக் கொள்கிறார்; செயற்படுகிறார்.

அதனாலேயே சமாதானத்துக்கு முற்றிலும் எதிரான போரைத் தீவிரப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறார். போர் என்றால் போர் என்று கூறித் தமிழருக்கு எதிராகப் போரைத் தொடங்கியவர் ஜே.ஆர். ஆனால் சமாதானமே தனது இலட்சியம், மூச்சு என்று கூறிக்கொண்டு பதவிக்கு வந்தவர் சந்திரிகா.

இப்போது ஜே. ஆர். தொடக்கி வைத்த போரை— இரு எதிரி நாடுகளுக்கிடையேயான போரின் அளவுக்கு— பெரும் போராக மாற்ற முனைந்திருக்கிறார் சந்திரிகா. இந்த வகையில், ஒப்பீட்டளவில் சொன்னதைச் செய்த ஜே. ஆரை விட, சொன்னதற்கு நேர் மாறாகச் செய்யும் சந்திரிகா மிகமிக மோசமானவர்; நாசகாரத்தனம் உள்ளவர்.

தேர்தல் காலத்தில் தென்பகுதி மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளில் பலவற்றை சந்திரிகாவால் சொற்பமேனும் நிறைவேற்ற முடியவில்லை. எனவே "நாகரிகமான" சர்வாதிகாரியாக மாறுவதற்கு அவர் ஆரம்பித்துள்ளார். பத்திரிகைச் சுதந்திரத்தை நசுக்க முயல்வது, எல்லா விவகாரங்களிலும் தான் நினைத்த மாதிரியே நடந்து கொள்வது என்பன அதற்கான அறிகுறிகளே.

தமது சர்வாதிகாரத்தனத்தை மறைத்துக் கொள்வதற்குப் போர் என்ற போர்வை மிகவும் பொருத்தமானது என்று கருதுகிறார். ஆகையால் சமாதானத்தை கிடப்பில் வைத்து விட்டு போர் வேடம் பூணுகிறார்.

மேலும் ஜனநாயக வாதியாக இருந்து கொண்டு போரினூடு தமிழர்களை இனப்படுகொலை செய்வதை விட, சர்வாதிகாரியாக நின்று செய்வதில் தப்பில்லை என்று அவர் கருதுகிறார் போலும்!

சந்திரிகா செய்யும் ஆயத்தங்களைப் பார்க்கும் போது இது இறுதிப் போராகவும் மாறலாம். எனவே தமிழர்களும் அதனை எதிர்கொள்ள முழு அளவில் தயாராக வேண்டிய கட்டாயம் உருவாகியுள்ளது.

# மீன்பிடித் தடை காரணமாக
# திருமலைப் பொருளாதாரம் பாதிப்பு

திருகோணமலை, மே 23

வடக்கு—கிழக்கு மாகாணங்களில் விதிக்கப்பட்ட மீன்பிடித் தடை திருகோணமலைப் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதித்துள்ளது என வர்த்தக வட்டாரங்களில் இருந்து அறிய வருகின்றது.

கடந்த மாதம் ஏப்ரல் 20 ஆம் திகதி முதல் பாதுகாப்புக் காரணங்களுக்காக மீனவர் கடலுக்குச் செல்வது தடுக்கப்பட்டுள்ளது. இதனால் திருகோணமலையில் மற்றத் தொழில்துறைகள் அனைத்தும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

திருகோணமலையின்பொருளாதாரம், குறிப்பாக திருகோணமலை நகரம், சுற்றுப்புறப் பிரதேசங்கள் ஆகியவற்றின் பொருளாதாரம் மீன்பிடித் தொழிலையே நம்பி இருக்கிறது.

மீன்பிடித் தொழிலே இத்தப் பிரிவில் பிரதான வருவாய் மூலமாக இருக்கிறது. விவசாயம் இரண்டாவது இடத்தையே பெறுகிறது.

திருகோணமலை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 7ஆயிரத்து 798 மீனவர் குடும்பங்களில் 65 சதவீதத்தினர் திருமலை நகரத்தில் வாழ்கின்றனர் என உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

மீனவர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் மீனை உண்பார்கள். இப்பொழுது அவர்களுக்கு அது இல்லாமல் போயிருக்கிறது.

அரசாங்கத்தில் மீன்பிடித் தடை தங்களுடைய வருமானத்தை மாத்திரம் அல்ல, தாங்கள் விரும்பி உண்ணும் மீன் கறியையும் இல்லாமல் செய்துள்ளது என்று மீனவர்கள் கூறுகின்றார்கள்.

மீனவர்களின் வருமானம் இல்லாது போவதால் மரக்கறி, உணவுப் பொருள், ஆடைகள், நகை ஆகிய தொழில்களும் சோர்ந்து போயுள்ளன.

மீனவருக்கென்று நடத்தப்பட்ட பல தேநீர்ச்சாலைகள் மூடப்பட்டுள்ளன. தாம் இப்பொழுது பாணும், ரொட்டியுமே சாப்பிடுவதாக மீனவர்கள் பலரும் கூறுகின்றார்கள்.

தாம் மீன் விற்ற வியாபாரிகள் கடைகளைப் பூட்டிவிட்டு திருகோணமலையை விட்டு வெளியேறிவிட்டார்கள் எனவும் அவர்கள் கூறியுள்ளார்கள். (ஒ-க)

## கொழும்பில் இருந்தே மீன் திருமலைக்கு வருகிறது

திருகோணமலை, மே23

திருகோணமலைக்குத் தற்பொழுது மீன் கொழும்பிலிருந்து எடுத்துச் செல்லப்படுகிறது.

வடக்கு கிழக்கில் மீன்பிடி தடை செய்யப்பட்டதைத் தொடர்ந்து திருகோணமலையில் கடுமையான மீன்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என அறியவருகின்றது.

கொழும்பிலிருந்து இராணுவத்தினருக்கு உணவுப் பொருள்கள் முதலியவற்றைக்கொண்டுவரும் ஒப்பந்தகாரர்களே மீனையும் கொண்டு வருகின்றார்கள். [ஒ-க]

## கணித மூலவள நிலையம் நாளை திறப்பு

யாழ்ப்பாணம், மே 23

புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் 162ஆவது வருட நிறைவைக் கொண்டாடும் முகமாக கணித மூலவள நிலையத் திறப்பு விழா நாளை புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக மாகாண கல்வி அமைச்சின் பிரதிச் செயாளர் திரு. சுந்தரம் டிவகலாலாவும் சிறப்பு விருந்தினராக யாழ் வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமியும் கலந்து கொள்கின்றனர். [க-118]

## மேடையில் அருகில் வந்தார் ராவ்; வந்தது கோபம் சோனியாவுக்கு!

புதுடில்லி, மே 23

மறைந்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் நினைவு தினக் கூட்டம் நேற்று முன்தினம் புதுடில்லியில் நடைபெற்றது.

மாநாட்டு மேடையில், இந்திய அரசியலின் முக்கிய தலைவர்களுடன், ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா காந்தியும் அமர்ந்திருந்தார்.

சிறிது நேரத்தின் பின் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் மேடைக்கு வந்து தமக்கென ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில் அமர்ந்தார்.

அது சோனியாவின் கதிரைக்கு அடுத்த கதிரை!

தனது அருகில் ராவ் இருந்ததும், கோபத்துடன் அவரை முறைத்துப் பார்த்தார் சோனியா. திடீரென எழுந்த சோனியா மேடையை விட்டு இறங்கிச் சென்று விட்டார்.

இக் காட்சியை பல்லாயிரக்கணக்கான மக்கள் நேரிலும், தொலைக்காட்சி மூலமும் கண்டனர்.

இவ்வாறு ராவ் அமர்ந்தவுடன் கோபத்துடன் சோனியா எழுந்ததற்கு ராஜீவ் கொலை விசாரணை தொடர்பாக காங்கிரஸ் காட்டும் மெத்தனப் போக்கே காரணம் எனக் கூறப்படுகிறது.

நரசிம்மராவை எதிர்க்கும் காங்கிரஸ் கட்சியின் திவாரி, அர்ஜுன்சிங் கட்சியினருக்கு ஆதரவாக சோனியா நடந்து கொள்வதாலேயே இவ்வாறு செய்தார் என்றும் கருதப்படுகிறது.

இது பற்றி கருத்து வெளியிட்ட அரசியல் விமர்சகர் ஒருவர், மாபெரும் அரசியல் நெருக்கடி ஒன்றை இந்தியா எதிர் நோக்கி உள்ளது எனத் தெரிவித்தார்.

150 வருட பழமை வாய்ந்த காங்கிரஸ் கட்சி தற்போது தள்ளாட்டம் கண்டுள்ளதாகவும் தெரிகிறது. (ஒ-5)

## யாழ். பல்கலைக்கழகத்தின் பட்டப் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், மே 23

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1993 ஆம் ஆண்டின் கலைத்துறை பொதுப் பட்டப் பரீட்சை, கலைத்துறை விசேஷ பட்டப் பரீட்சை, வர்த்தக மாணிப் பரீட்சை, வர்த்தக முகாமைத்துவ மாணிப் பரீட்சை ஆகியவற்றின் முடிவுகளை வெளியிட்டுள்ளது.

கலைத்துறைப் பொதுப் பட்டப் பரீட்சையில் செல்வி எஸ். ஞானவர்ணி முதலாம் வகுப்பிலும், 19 பேர் இரண்டாம் வகுப்பு மேல் பிரிவிலும், 33 பேர் இரண்டாம் வகுப்பு கீழ்ப் பிரிவிலும், 33 பேர் (சாதாரண) சித்தியும் பெற்றுள்ளனர்.

கலைத்துறை விசேஷ பட்டப் பரீட்சையில் —

பொருளியலில் 6 பேர் இரண்டாம் வகுப்பு மேல் பிரிவிலும், 13 பேர் இரண்டாம் வகுப்பு கீழ்ப்பிரிவிலும், 3 பேர் சாதாரண சித்தியும் பெற்றனர்.

புவியியலில் 8 பேர் இரண்டாம் வகுப்பு மேல் பிரிவிலும், 8 பேர் இரண்டாம் வகுப்பு கீழ்ப்பிரிவிலும்,5 பேர் (சாதாரண) சித்தியும் அடைந்துள்ளனர்.

தமிழில் 7 பேர் இரண்டாம் வகுப்பு மேல் பிரிவிலும் 10, பேர் இரண்டாம் வகுப்பு கீழ்ப் பிரிவிலும் சித்தி அடைந்துள்ளனர்.

அரசியல் அறிவியலில் இருவர் இரண்டாம் வகுப்பு மேல் பிரிவிலும், அறுவர் இரண்டாம் வகுப்பு கீழ்ப்பிரிவிலும், ஒருவர் (சாதாரண) சித்தியும் அடைந்துள்ளனர்.

இந்துநாகரிகத்தில் செல்வி எஸ். விக்னேஸ்வரி முதலாம் வகுப்பிலும், 10 பேர் இரண்டாம் வகுப்பு மேல் பிரிவிலும் 2 பேர் இரண்டாம் வகுப்பு கீழ்ப்பிரிவிலும், ஒருவர் சாதாரண சித்தியும் அடைந்துள்ளனர்.

கிறிஸ்தவ நாகரிகத்தில் நாலு பேர் இரண்டாம் வகுப்பு மேல் பிரிவிலும், ஒருவர் இரண்டாம் வகுப்பு கீழ்ப் பிரிவிலும் சித்தி அடைந்துள்ளனர்.

சமஸ்கிருதத்தில் எம். பாலகைலாசநாத சர்மா, செல்வி கே. தயானந்தி ஆகியோர் முதலாம் வகுப்பிலும், ஒருவர் இரண்டாம் வகுப்பு மேல் பிரிவிலும் சித்தி அடைந்துள்ளனர்.

தத்துவ இயலில் கே. அன்ரன் டயஸ் முதலாம் வகுப்பிலும், இருவர் இரண்டாம் வகுப்பு மேல் பிரிவிலும் சித்தி அடைந்துள்ளனர்.

நாடகம், அரங்கக்கலைகளில் மூவர் இரண்டாம் வகுப்பு மேல் பிரிவில் சித்தி அடைந்துள்ளனர்.

வரலாற்றில் செல்வி கே. சாந்தினி முதலாம் பிரிவிலும், நால்வர் இரண்டாம் வகுப்பு மேல் பிரிவிலும் ஐவர் இரண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கம்பளையில் பொலிஸார் சோதனை

கொழும்பு, மே 23

கம்பளை கண்டி வீதியில் உள்ள, தமிழர்களின் கடைகள் மற்றும் குடியிருப்புகள் பொலிஸாரினால் துப்பாக்கி முனையில் சோதனையிடப்பட்டுள்ளன.

கடந்த 16 ஆம் திகதி இரவு நடைபெற்ற இந்த சோதனையின் போது தமிழர்களது அடையாள அட்டைகளும், ஏனைய ஆவணங்களும் வெகு நுணுக்கமாக பரிசோதிக்கப்பட்டன. அதே சமயம் புதுளை தெமோதர "ஸ்டோர் டிவிஷனை" சோதனையிட்ட பொலிஸார் சின்னையா புஸ்பராஜா என்ற இளைஞரை, சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். (க-5)

## வலி. மேற்கு பிரதேச செயலக நடமாடும் சேவை

வலி. மேற்கு, மே. 23

வலிகாமம் மேற்கு பிரதேச செயலக ஐந்தாவது நடமாடும் செயலக சேவையின் போது வானொலிக்கான தமிழ் ஈழ நிர்வாக சேவையின் அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டன,

வட்டு மேற்கு, வட்டு தெற்கு வட்டு தென் மேற்கு ஆகிய மூன்று கிராம அலுவலகங்கள் பிரிவுகளையும் ஒன்றிணைத்து கடந்த 20 ஆம் திகதி நடமாடும் செயலக சேவை வட்டு. கார்த்திகேய வித்தியாசாலையில் நடைபெற்றது.

இச் சேவையின் போது ஏற்கனவே திருமணம் செய்து பதிவு செய்யாத 33 தம்பதிகள் பதிவுத் திருமணம் செய்துகொண்டனர். சுமார் 100 பேர் அடையாளஅட்டைகளுக்கும் சுமார் 300 பேர் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுச் சான்றிதழ்களுக்கும் விண்ணப்பம் செய்தனர்.

பிரதேச செயலர் திரு கா. சந்திரராஜா முன்னர் இடம் பெற்ற நான்கு நடமாடும் செயலக சேவையின் போதும் சுமார் 850 பேர் பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவுச் சான்றிதழ்களை மிக இலகுவாகப் பெற்றுள்ளதாக அறிமுக உரையின் போது குறிப்பிட்டார். [க-175]

# சிறுபான்மையினரின் பேரம் பேசும் ஆற்றலை ஒழிக்கும் தந்திரமே ஜேர்மன் தேர்தல் முறை!

அரசமைப்பு மாற்றம் ஜூலை 15க்கு முன் திட்டமிட்டபடி மேற்கொள்ளப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்த மாற்றம் ஜனாதிபதி முறை ஒழிப்பு, தேர்தல் முறை மாற்றம் என்ற இரண்டு மாதிரிகளில் பெருமளவு கவனம் செலுத்தப்படுகிறது. இவை தொடர்பில் நாடாளுமன்றக் கட்சிகளுக்கிடையில் பல்வேறு கலந்துரையாடல்கள் இடம் பெற்றுள்ளன. இருந்தபொழுதும் ஐ. தே. கட்சி இம்முறையை ஒழிப்பதற்கான விருப்பத்தை இதுவரை பகிரங்கமாக அறிவிக்கவில்லை. தனது சொந்த அரசியல் திட்டத்தை சீர்குலைக்க அது ஒருபொழுதும் விரும்பாது. பெருமளவு ஐ. தே. கட்சி நலன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட 2ஆம் குடியரசு அரசியல் திட்டத்தை பாதுகாக்கவே அது விரும்பும்.

### சிறுபான்மைக் கட்சிகளின் நிலை

ஜனாதிபதி முறையை ஒழிப்பது தொடர்பில் இதுவரையில் எந்த சிறுபான்மைக் கட்சியும் விருப்பம் தெரிவிக்கவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போன்றவைகள் இவை தொடர்பில் மீள் பரிசிலனையில் இருக்கின்றன. ஜனாதிபதி தெரிவுமுறை சிறுபான்மையினரைப் பொறுத்தவரை ஒரு சாதகமான நிலைப்பாடாகும்.

ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்பட்டால் தமது பேரம் பேசும் ஆற்றல் குறைந்துவிடும் என இக்கட்சிகள் சிந்திப்பது நியாயமானதாகும். கடந்த தேர்தல் காலங்களில் சிறுபான்மைக் கட்சிகள் தமது பேரம்பேசும் சக்தியை பாவித்ததை நாம் காணலாம்.

நாட்டின் ஜனாதிபதி பல இன மக்களினால் தெரிவு செய்யப்படுவதினால் ஒரு பொது மனிதனாகவிருந்து செயற்பட வேண்டியுள்ளது. மேலும் திடீர் அரசியல், சமூக கல்வி பாதுகாப்பு போன்ற முடிவுகளை நிறைவேற்று ஜனாதிபதியினால் மேற்கொள்ள முடியும்.

எனவே சிறுபான்மையினரைப் பொறுத்த விடயத்தில் காலதாமதம் இன்றி சில முக்கிய தீர்மானங்களை மேற்கொள்ள ஜனாதிபதி ஆட்சி பொருத்தமுடையதாக இருக்கும். இருந்தாலும் ஜனாதிபதி தனக்கு வழங்கப்பட்டுள்ள எல்லா அதிகாரங்களையும் பிரயோகிக்க முனைகின்ற பொழுது அதிகார துஷ்பிரயோகம் இடம்பெறவும் வாய்ப்பு உண்டாகிறது.

எனவே ஜனாதிபதி முறையில் சிறுபான்மையினரைப் பொறுத்து சாதகமான நிலைப்பாடுகளே அதிகம் இருக்கின்றது. எனவே இது விடயத்தில் இக்கட்சிகள் மௌனம் சாதிக்கின்றன.

தற்பொழுது நாட்டின் பாதுகாப்பு சூழ்நிலை மோசமாகவுள்ளது. யுத்தம் ஒன்று மூளும் சந்தர்ப்பத்தில் முப்படைத்தளபதியாக ஜனாதிபதியே இருந்து செயற்படுவார்.

தொங்கு நாடாளுமன்றம் எந்த நேரமும் அரசிற்கு பாதகமாக மாறலாம். பலமான எதிர்க்கட்சியும் நாட்டில் இருப்பதினால் ஜனாதிபதி முறை மாற்றம் அரசாங்கத்தைப் பொறுத்தவரை மீள் பரிசிலனைக்குரிய விடயமாகும்.

### தேர்தல் முறை

விகிதாசாரத் தேர்தல் முறையை மாற்றி ஜேர்மன் தேர்தல் முறையை அறிமுகப்படுத்துவதாக [illegible] கூறுகிறது. ஆனால் ஜேர்மன் தேர்தல் முறை [illegible] கள் தொகுதி ரீதியாகவும் 50% ஆசனங்கள் கட்சிகள் பெற்ற வாக்குகளின் விகிதாசாரத்தின் அடிப்படையிலும் ஒதுக்குவதாகும். ஆனால் அரசாங்கம் 160பழைய தேர்தல் தொகுதிகளையும் 8 பல அங்கத்துவ தொகுதிகளையும் உள்ளடக்கி 168 ஆசனங்கள் தொகுதி ரீதியாகவும், 77 ஆசனங்கள் விகிதாசார அடிப்படையிலும் ஒழுங்குபடுத்தி உள்ளது மொத்தம் 245 ஆசனங்களை நாடாளுமன்றம் கொண்டியங்கும் என அரசாங்கத்தின் யோசனை அமைந்துள்ளது.

இந்த முறையின் விளைவுகள் சிறுபான்மையினரைப் பொறுத்து பாதகமானதாகும். வட - கிழக்கைப் பொறுத்து தொகுதி ரீதியான தேர்தல் சாதகமாக அமைந்தாலும் வட-கிழக்கிற்கு வெளியே வாழும் தமிழ் - முஸ்லிம்கள் பாதிக்கப்படுவர். கொழும்பு, கண்டி, புத்தளம் போன்ற முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் பல அங்கத்தவர் தொகுதிகள் ஏற்படுத்தப்படல் வேண்டும்.

மலையக மக்களைப் பொறுத்தும் இந்த நிலைப்பாடு காணப்படுகிறது. மேலும் உத்தேச ஜேர்மன் அரசியல்முறை பெரும்பான்மை அரசியல் கட்சிகள் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆசனங்களைப் பெறும் வாய்ப்பை எதிர்காலத்தில் ஏற்படுத்தலாம். இதனால் சிறுபான்மைக்கட்சிகள் நாடாளுமன்றம் தொடர்பில் சக்தியில்லாத கட்சிகளாக விளங்க வாய்ப்பு ஏற்படுகிறது. ஆனால் விகிதாசாரத் தேர்தல் முறையில் பல்வேறு கட்சிகளுக்கு அவை பெற்ற விகிதாசாரத்தின் அடிப்படையில் ஆசனங்கள் கிடைப்ப[illegible] றில் இரண்டு பெரும்பான்மை [illegible] காணப்படுகிறது. எனவே உத்தேச ஜேர்மன் தேர்தல் முறை சிறுபான்மையினரின் பேரம் பேசும் ஆற்றலை ஒழிப்பதற்கான அரசின் புதிய தந்திரமாகவே கருத வேண்டியுள்ளது.

### அதிகார பரவலாக்கல்

இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயத்தில் அரசாங்கம் "சமஷ்டி ஆட்சி முறை" பற்றிப் பேசுகிறது. சமஷ்டி ஆட்சி தொடர்பாக இதுவரை அரசாங்கத்தின் திட்டம் வெளிப்படுத்தப்படவில்லை. இந்திய அரைகுறை சமஷ்டி, அவுஸ்திரேலிய கன்ரன் சமஷ்டி, மலேசிய சமஷ்டி அல்லது அமெரிக்காவில் இயங்கும் பூரண சமஷ்டி என்ற சமஷ்டி மாதிரிகளில் எதனை இலங்கை மக்களுக்கு முன் வைக்க வேண்டும் என்ற விடயத்தில் இழுபறி காணப்படுகின்றது.

தமிழர் பிரச்சினையில் வடக்கு - கிழக்கு இணைப்பு முக்கியமான அம்சமாகும். எந்த ஒரு சமஷ்டியும் வட-கிழக்கு இணைந்த அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படல் வேண்டும். இது விடயத்தில் அரசின் பங்காளியான ஜனநாயக ஐக்கிய தேசியக்கட்சி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இது அரசாங்கத்திற்கு புதிய தலையிடியைத் தோற்றுவித்துள்ளது.

தமிழ் அரசியல் கட்சிகளுக்கிடையிலும் பொதுவான ஒரு தீர்வுத்திட்டம் இதுவரை முன் வைக்கப்படவில்லை. முஸ்லிம்களைப் பொறுத்தும் தேசிய ரீதியில் ஒருமித்த கருத்து இதுவரை மேற்கொள்ளப்படாமை கவலைக்குரியதாகும்.

இது தொடர்பான ஆக்கபூர்வமான முயற்சிகள் கூட கடந்த காலங்களில் மேற்[illegible]ளப்படவில்லை. எனவே அதிகார பரவலாக்[illegible] தொடர்பில் இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட விவாதங்களில் சில விடயங்களில் பொது அபிப்பிராயம் நிலவுவதையும் குறிப்பிட வேண்டும். சமஷ்டித் தீர்வுக்கு, வட-கிழக்கு இணைப்பு, நியாயமான அதிகார பரவலாக்கல், இணைந்த வட - கிழக்கில் முஸ்லிம்களுக்கு ஒரு தனி அதிகார அலகு என்ற அம்சங்களில் பெரும்பாலான அரசியல் கட்சிகளுக்கிடையில் ஒருமித்த கருத்து நிலவுகிறது.

ஆனால் விடுதலைப்புலிகள் இல்லாத பேச்சுவார்த்தைகள் அதிகார பரவலாக்கங்கள் தோல்வியில் முடியும் என்பது இலங்கையின் கடந்தகால வரலாறும் யதார்த்தமுமாகும். இதனை சம்பந்தப்பட்டவர்கள் உணர்தல் வேண்டும்.

### அரசின் இரட்டை வேடம்

கடந்த காலங்களில் அரசாங்கம் சமஷ்டித் தீர்வு, அதிகார பரவலாக்கம் என்று கூறிக்கொண்டு மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை மெல்ல மெல்ல மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதை அவதானிக்கமுடிகிறது. உதாரணமாக —

★ தேசிய பாடசாலைகளை நாடளாவிய ரீதியில் அமைத்து அவைகளை மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளது.

★ வட—கிழக்கு மாகாண வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் மத்திய அரசின் சுகாதார அமைச்சு கையேற்றுள்ளது. இவைகள் மாகாணசபைகள் கொண்டுள்ள அதிகாரங்களாகும்.

★ பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மீண்டும் அரசாங்க அதிபருக்கு மாற்றப்பட்டுள்ளன.

மாகாணசபைகள் பற்றிய சட்டம் மாகாணசபைப் பட்டியல் [பட்டியல் -1], ஒதுக்கப்பட்ட பட்டியல் [பட்டியல் -2], ஒத்தியங்கும் பட்டியல் [பட்டியல் -3] என்ற பட்டியல்களை வெளியிட்டுள்ளது. இவற்றில் 37 விடயங்கள் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஒத்து இயங்கும் பட்டியல் மத்திய அரசும், மாகாண அரசும் இணைந்து திட்டமிடக் கல்வியும், கல்விச் சேவையும், உயர்கல்வி போன்ற விடயங்களை உள்ளடக்கிய 37 விடயங்களைக் கொண்டுள்ளது. ஆனால் அரசாங்கம் இந்த அதிகாரங்கள் தொடர்பில் மாகாணசபைகளைப் புறக்கணித்து இயங்குகிறது.

எனவே அரசாங்கம் தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் இதயசுத்தியுடன் இயங்க வேண்டும் இவற்றை நிறைவேற்றுவதில் உள்ள சிக்கல்கள் பற்றி நாம் மேலே பார்த்தோம். இனப்பிரச்சினைத் தீர்வு இடமாக அரசியலமைப்பு மாற்றத்தில் இடம்பெறவேண்டும். ஜூலை 15இல் மேற்கொள்ளவிருக்கும் அவசரமான அரசின் காலக்கெடு பரிசீலனைக்குட்படுத்தப்படல் வேண்டும்.

சகல மக்களையும் திருப்திப்படுத்தக் கூடியதாக உத்தேச அரசியல் திட்டம் மாற்றியமைக்கப்படல் வேண்டும். "அரசமைப்புச் சட்டம்" என்பது சாதாரண விடயமொன்றல்ல. நாட்டினதும் மக்களினதும் வாழ்வும் வலிமையும் அதில் தங்கியிருக்கின்றன. அரசியல், பொருளாதார, சமூக அமைப்பு, கல்வித்துறை மட்டுமன்றி சட்டத்துறை சார்ந்த அனைத்து அம்சங்களும் அதன் அமைப்புக்கேற்பவே இயங்க வேண்டியுள்ளன. எனவே சகல அரசியல் கட்சிகளும் கட்சி நலன் அடிப்படையில் சிந்திக்காமல் இயங்குவது அவசியமாகும்.

நன்றி:-
வீரகேசரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒளிவீச்சு வெளிவந்தது

யாழ்ப்பாணம், மே 23
நிதர்சனம் நிறுவனத்தின் மாதாந்த வீடியோ சஞ்சிகையின் ஏப்ரல் மாத ஒளிநாடா வெளிவந்துள்ளது.

திருகோணமலை துறைமுகத்தினுள் ஊடுருவி நடத்தப்பட்ட கரும்புலித் தாக்குதலினால் சிறிலங்கா கடற்படையின் 'ரணசுரு' 'சூரயா' ஆகிய யுத்த கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டமை, தமிழீழ வான் பரப்பில் சிறிலங்கா வான் படையின் இரண்டு ''அவ்ரோ'' விமானங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்டமை, அன்னை பூபதியின் 7 ஆம் ஆண்டு நினைவு நிகழ்ச்சிகள், மற்றும் கலை நிகழ்ச்சிகள் என்பன இந்த ஒளிவீச்சில் இடம்பெற்றுள்ளன.

இவ்வொளி நாடா இன்று செவ்வாய்க்கிழமை முதல் யாழ் ஸ்ரீதர் திரையரங்கில் காண்பிக்கப்படும். (ஐ)

## விளையாட்டு நிகழ்வுகள்

வண. சகோதரர் ஹில்லறி ஜோசப் ஞாபகார்த்த கேடயத்துக்காக யாழ்ப்பாணம் ''டிலாசால் சகோதரர்கள் சபை'' நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் யாழ் பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3.00 மணி :- உதயன் வி.க. அணி எதிர் யாழ். பல்கலைக் கழக ''பி'' அணி.

★ 4.00 மணி :- சென்பற்றிக்ஸ் கல்லூரி அணி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி அணி.

★ ★ ★

வலி. கிழக்கு உதைபந்தாட்டச் சங்கம் இணைந்த கழகங்களுக்கு இடையில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகலில் கரியாலை மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3.00 மணி :- ஈச்சமோட்டை எதிர் பொற்பதி

★ 4.00 மணி :- சித்தி நாயகர் எதிர் யங் ஸ்ரார்

★ 5.00 மணி :- சென் றோக்ஸ் எதிர் கவி.

★ ★ ★

ஜொலி ஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் ஈ. எஸ் பேரம்பலம் சக நிறுவனத்தின் ஆதரவுடன் ஜொலி ஸ்ரார்ஸ் கிண்ணத்துக்காக நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இரண்டாவது அரையிறுதியாட்டம் இன்று பிற்பகல் 1.30 மணி முதல் யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். இந்த ஆட்டத்தில் சென்றலைட்ஸ் புளூஸ் அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் அணி மோதும்.

## பட்டதாரி பயிலுநர் நியமன நேர்முகத் தேர்வு ஜூனில்

பட்டதாரி பயிலுநர் நியமனங்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் அடுத்த மாதம் முதல் இடம்பெறவுள்ளன.

இப் பரீட்சைக்கு இதுவரை விண்ணப்பிக்கத் தவறியோர் விண்ணப்பங்களை அனுப்பலாம் என்றும், வ. கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தோரும் விண்ணப்பிக்கலாம் என்றும் இளைஞர் விளையாட்டுத் துறை அமைச்சின் பட்டதாரி பயிலுநர்கள் பதிவுத் திட்டப் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சினால் அண்மையில் அறிவிக்கப்பட்ட வேலையற்ற பட்டதாரிகளை பதிவு செய்யும் திட்டத்திற்கு இதுவரை 4 ஆயிரம் பட்டதாரிகள் பதிவு செய்வதற்காக விண்ணப்பித்துள்ளனர். (ஐ)

## கொழும்புக்கு உலக அழகுராணி

கொழும்பு, மே 23
உலக அழகுராணி ஐஸ்வர்யாராய் அடுத்த மாதம் 22 ஆம் திகதி கொழும்பு வருவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவைச் சேர்ந்த ஐஸ்வர்யாராய் 1994 ஆம் ஆண்டின் உலக அழகுராணியாவார்.

கொழும்பு கிழக்கு றோட்டறிக் கழகத்தின் அழைப்பை ஏற்று இங்கு வரும் அழகு ராணி ஐஸ்வர்யா கொழும்பில் மூன்று தினங்கள் தங்கியிருப்பாராம். (அ)

## கிணற்றில் இளைஞர் சடலம்

யாழ்ப்பாணம், மே 23
கிணற்றில் இருந்து மீட்கப்பட்ட இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

நல்லூர் கிழக்கைச் சேர்ந்த கந்தையா நித்தியானந்தன் (வயது 28) என்ற இளைஞரே இச்சம்பவத்தில் மரணமானவராவார்.

நேற்று முன்தினம் வீட்டில் இருந்து புறப்பட்ட இவர் வீடு திரும்பவில்லை எனவும் நேற்று தேடிப் பார்த்தபோதே கிணற்றில் சடலமாகக் காணப்பட்டார் எனவும்; இவர் ஒரு மனநோயாளி எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-15)

### யாழ். பல்கலை....

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)
டாம் வகுப்பு கீழ்ப் பிரிவிலும் ஒருவர் சித்தியும் அடைந்துள்ளனர்.

நுண்கலையில் இருவர் இரண்டாம் வகுப்பு மேல் பிரிவிலும், ஒருவர் சாதாரண சித்தியும் அடைந்துள்ளனர்.

மொழியியல் ஒருவர் இரண்டாம் வகுப்பு கீழ்ப் பிரிவில் சித்தி அடைந்துள்ளார்.

வர்த்தக மாணிப் பரீட்சையில் 8 பேர் இரண்டாம் வகுப்பு மேல் பிரிவிலும், 21 பேர் இரண்டாம் வகுப்பு கீழ்ப்பிரிவிலும், 51 பேர் (சாதாரண) சித்தியும் அடைந்துள்ளனர்.

வர்த்தக முகாமைத்துவ பட்டமாணிப் பரீட்சையில் எஸ் திருஞானசம்பந்தர் முதலாம் வகுப்பிலும், 14 பேர் இரண்டாம் வகுப்பு மேல் பிரிவிலும், 19 பேர் இரண்டாம் வகுப்பு கீழ்ப்பிரிவிலும், 14 பேர் சாதாரண சித்தியும் அடைந்துள்ளனர். (ஒ-ஏ)

★ விமான சேவை தடைப்பட்டதால்

# மட்டு. வங்கி கிளைகளில் பணப் புழக்கம் பாதிப்பு!

## படையினருக்கு சம்பளம் வழங்கவும் பணம் இல்லை

கொழும்பு, மே. 23
மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வங்கிக் கிளைகளுக்கு கடந்த சில வாரங்களாக கொழும்பு தலைமையகங்களில் இருந்து பணம் எடுத்துச் செல்லப்படாததை அடுத்து அங்கு பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டிருக்கிறது.

விமானப்படை விமானங்களின் போக்குவரத்து மட்டக்களப்புக்கும், கொழும்புக்கும் இடையே தடைப்பட்டிருப்பதால் இந்நிலை ஏற்பட்டிருக்கிறது.

வங்கி காப்புறுதி செய்யாது ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்துக்கு பணத்தை அனுப்ப சட்டவிதிகள் இடம் கொடாது.

மட்டக்களப்பு வங்கிகளுக்கான பணத்தை கொழும்பில் இருந்து விமானப்படை விமானங்களில் அனுப்புவதற்கே காப்புறுதி செய்யப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் ஏவுகணைத் தாக்குதல்களைத் தொடர்ந்து மட்டக்களப்பு—கொழும்பு விமான சேவையும் சமீப நாட்களாக தடைப்பட்டிருந்தது.

இதனால் மட்டக்களப்புக்கு பணம் எடுத்துச் செல்லப்படவில்லை.

வங்கிகளில் பணத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதை அடுத்து வாடிக்கையாளர்கள் பணத்தை வைப்புச் செய்வதைவிட மீளப்பெறுவதிலேயே ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அரச கூட்டுத்தாபன ஊழியருக்கும், இராணுவத்தினர், பொலீஸார் ஆகியோருக்கும் சம்பளம் வழங்க கோடிக்கணக்கான ரூபா பணம் தேவைப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# துறைமுகம் வரும் கொள்கலன்களை தீவிர சோதனை செய்யுமாறு பணிப்பு

வெளிநாடுகளில் இருந்து வரும் கொள்கலன்களை தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தாமல் துறைமுகத்துக்கு வெளியே எடுத்துச் செல்ல அனுமதிக்க வேண்டாம் என்று பாதுகாப்பு அமைச்சுக்குக பகுதியினருக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

குறிப்பாக வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பெயரிலும் பாதுகாப்பு அமைச்சின் பெயரிலும் எடுத்து வரப்படும் கொள்கலன்களை விசேட கவனம் எடுத்து சோதனை செய்யுமாறு பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நான்கு நாடுகளில் இருந்து கொழும்பு துறைமுகத்துக்கு வந்துள்ள கொள்கலன்களை தீவிரமாக சோதனையிடுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் கொள்கலன்களைக் கடுமையாக சோதனைக்கு உட்படுத்துவதில் பொலீஸாரும் இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் (ஐ-10)

# யுத்தம் வெளிநாட்டு முதலீடுகளை பாதிக்கவில்லை என்கிறார் கதிர்காமர்

கொழும்பு, மே 23
வடக்கு - கிழக்கு நெருக்கடி ஸ்ரீலங்காவில் வெளிநாட்டு முதலீட்டையோ அல்லது வெளிநாட்டு முதலீட்டாளர்களையோ பெரிதும் பாதிக்கவில்லையாம்!

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அண்மையில் சிங்கப்பூரில் வைத்து சிங்கப்பூர் தொலைக்காட்சிச் சேவைக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கிறார்.

தலைநகர் கொழும்புக்கு 400 கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பாலே யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த யுத்தத்தினால் வெளிநாட்டு முதலீட்டாளர்களோ அல்லது நாட்டில் வெளிநாட்டு முதலீடுகள் செய்யப்படுவதோ அதிகம் பாதிக்கப்படவில்லை.

கடந்த பத்தாண்டுகளாக இந்த யுத்தம் நடைபெறுகின்றது. எனினும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி வீதத்தை 5.5 என்ற மட்டத்தில் அரசு தொடர்ந்து பேணி வருவது வெளிநாட்டு முதலீடுகள் குறித்து சரியான பிரதிபலிப்பைக் காட்டுகின்றது.

1986 முதல் 1994 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஆயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட திட்டங்களுக்கு இலங்கை முதலீட்டுச் சபை அங்கீகாரம் அளித்திருப்பது முதலீடு தொடர்பாக ஸ்திரமான தன்மையை வெளிப்படுத்தும்.

இது தவிர உல்லாசப் பயணிகளின் வருகையும் பல மடங்கு அதிகரித்திருக்கிறது. — இவ்வாறு அமைச்சர் கதிர்காமர் சிங்கப்பூர் தொலைக்காட்சிக்கு மேலும் தெரிவித்தார். (உ)

# தமிழக மீனவர் விவகாரம் இலங்கை அரசுடன் பேசுக

## முதல்வர் ஜெயலலிதா கோரிக்கை

சென்னை, மே 23
இந்திய மீனவர்களுக்கு இலங்கைப் படையினரால் தொடர்ந்து ஏற்பட்டுவரும் பாதிப்புகள் குறித்து முடிவு எடுப்பதற்காக இலங்கை அரசுடன் மத்திய அரசு பேச்சு நடத்தவேண்டும்.

— தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா பிரதமர் நரசிம்மராவிடம் இவ்வாறு வலியுறுத்திக் கேட்டுள்ளார்.

முதல்வர் ஜெயலலிதா இது தொடர்பாக பிரதமர் நரசிம்மராவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இந்தியக் கடற்படையின் 7 பிரிவுகளை தமிழகத்தில் நிரந்தரமாக இயங்க வைக்க அனுமதி வழங்குமாறு அந்தக் கடிதத்தில் செல்வி ஜெயலலிதா கோரியுள்ளார்.

கடந்த 20 ஆம் திகதி கச்சதீவுக்கு அருகே தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் சுடப்பட்ட சம்பவம் குறித்து முதல்வர் ஜெயலலிதா தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார். (ஐ)

## சிறுவர் போசாக்கு நிலையம்

இருபாலைப் பகுதியில் உள்ள குழந்தைகளின் ஆரம்பக் கல்வி, உடல்நல வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் அரசியல் துறையினரின் மாணவர் பிரிவினரால் நடத்தவிருக்கும் சிறுவர் போசாக்கு நிலையம் ஒன்றை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் தேசநிர்மாணிகள் அமைத்து வருகின்றனர்.

இந்த நிலையத்தின் சிறுவர்களுக்கான பூங்காவும் அமைக்கப்பட்டு வருகின்றது. இதன் மூலம் இப் பகுதியில் உள்ள பெருமளவு குழந்தைகள் நன்மையடையக் கூடியதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ)

### பாலர் நூல் வெளியீட்டு விழா

யாழ் மாநகரசபை, ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதிய உதவியுடன், பாலர் நலனுக்காக மேற்கொள்ளும் திட்டங்களில் ஒரு பகுதியாக பாலர்களுக்கான பாடல் நூல் ஒன்று வெளியிடப்படவுள்ளது.

நாளை மறுதினம் வியாழக்கிழமை, மாலை 3.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும் இப் 'பாலர் கல்விப் பாடல் நூல்' வெளியீட்டு விழாவுக்கு மாநகர சபை ஆணையாளர் திரு. சவ. பொ. பாலசிங்கம் தலைமை வகிப்பார்.

### சோனியா....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வளைந்து கொடுக்க முடியும் என்பது வேடிக்கையானது என சில அரசியல் விமர்சகர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

'சோனியா காந்தி பின்னால் இருந்து நெருக்கடி கொடுப்பது நல்லதல்ல; அது பிரதமர் பதவிக்கு மதிப்புத் தருவதாக இல்லை'' — என்று தெரிவித்து பிரதமர் ராவின் ஆதரவாளர்கள் சோனியா காந்திக்கு எதிராக எதிர்ப்புக் குரல் கிளப்பி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்ற.

### இலங்கையில் ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
பும் கேட்டுக் கொண்டால் உங்களது ஒத்துழைப்பை வழங்குவதற்கு ஆஸ்திரேலிய அரசு தயார் என்று கூறிய அவர்—

ஆனால் இப்போது காணப்படும் சூழ்நிலையில் ஒரு நிலையாக ஆஸ்திரேலியா பங்குபற்றுவதற்கான வாய்ப்பு எதுவும் இல்லை— என்றும் சொன்னார்.

புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு இப்போது காலம் கனியவில்லை என்று கருதும் ஸ்ரீலங்கா அரசும் ஆஸ்திரேலியாவின் இந்த மதிப்பீட்டை ஒப்புக்கொள்வதாக அவர் சொன்னார்.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் மோதல் வெடித்தது குறித்து உடனடியாக ஏமாற்றம் தெரிவித்த நாடுகளில் ஆஸ்திரேலியாவும் ஒன்று எனபதும்—

ஆகவே புலிகளும் மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என ஆஸ்திரேலியா வலியுறுத்தி வருவதும் —குறிப்பிடத்தக்கவையாகும். (உ-4-6)

### ராவுக்கு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
அடுத்து அதிருப்தியாளர்கள் தனியே பிரிந்து சென்று தாங்களே உண்மையான காங்கிரஸ் என்று அறிவித்திருப்பதும் தெரிந்ததுவே.

கட்சித் தலைவர் பதவியை விட்டு விலகும்படி பிரதமர் ராவை வற்புறுத்துவதற்காக அவரை சோனியா காந்தி அண்மையில் நேரடியாகச் சந்தித்தார் என்றும் கூறப்படுகின்றது.

கட்சியின் அதிருப்தியாளர்கள் கடந்த வெள்ளியன்று பிரதமர் ராவுக்கு எதிராக புதுடில்லியில் பேரணி ஒன்றை நடத்திய சமயம் —

கட்சி பிளவுபடுவதை தடுக்க போதுமான அளவில் பிரதமர் ராவ் செயற்படவில்லை என்று ராவைக் குற்றஞ்சாட்டும் விதத்தில் அர்த்தம் தொனிக்கும் வகையில் ''பகஸ்'' செய்தி ஒன்று சோனியா காந்தியின் அலுவலகத்திலிருந்து செய்தி நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

[மற்றொரு செய்தி 5 ஆம் பக்கத்தில்]

### நெருக்கடி--

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
களையும் மற்றும் சில புதிய முகங்களையும் அமைச்சரவையில் சேர்ப்பதன் மூலம் தமக்கு எதிரான நெருக்கடிகளைச் சமாளிக்க பிரதமர் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

### கப்பலில் பொருள்களை....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கக் கூறப்படுகிறது.

''மாஹோ'' கப்பல் வடபகுதிக்கு எடுத்து வரப்படுவதற்காக 9 ஆயிரத்து ஐநூறு பரல் மண்ணெண்ணெய் ஏற்றிய நிலையில் கடந்த ஒருவார காலத்துக்கு மேல் கொழும்புத் துறைமுகத்தில் தவம் கிடக்கிறது.

அந்தக் கப்பலை வடக்கே அனுப்புவதைத் தடை செய்வதிலும் அதில் உள்ள மண்ணெண்ணெய் பரல்களை இறக்க வைப்பதிலும் அரசின் சில வட்டாரங்கள் கொழும்பில் முயற்சி எடுப்பதாகத் தெரிகிறது.

வடக்கிற்கு பொருள்களை எடுத்துவரும் சேவையில் ஈடுபட்டிருக்கும் ''குமண'' கப்பல், கொழும்புத் துறைமுகத்தில் தற்போது எடுக்கப்பட்டு வரும் பாதுகாப்புக் கெடுபிடிகளைக் காரணம் காட்டி கொழும்புத் துறைமுகத்துக்கு வெளியே சில நாட்களாகக் காத்து வைக்கப்பட்டிருக்கிறது.

கொழும்பிலிருந்து பொருள்களுடன் வர வேண்டிய ஆயுதமு இரு கப்பல்களும் நேற்று கொழும்பிலிருந்து புறப்பட்டதாகத் தகவல் ஏதும் யாழ்ப்பாணத்துக்கு கிடைக்கவில்லை.

திருகோணமலையிலிருந்து ஒரு தொகுதி மாவை ஏற்றி வருவதற்கு அங்கு சென்ற 'ஹறண'' கப்பல் குறித்தும் தகவல் எதுவும் இல்லை.

பயணிகள் சேவையில் ஈடுபடும் ''நரோமா'' கப்பலும் இன்று ''ருத்தித் துறைக்கு வந்து சேருமா என்பதை நேற்று மாலைவரை செயலக வட்டாரங்கள் உறுதி செய்யவில்லை.

இதற்கிடையில் —
யாழ்ப்பாணத்துக்கு ஐந்து கப்பல்களில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் அனுப்பப்படுவதாக அரசு சார்பு பத்திரிகை ஒன்று நேற்று செய்தி வெளியிட்டது.

வடக்கிற்குப் பொருள்களை ஏற்றி வரும் கப்பல்களின் நிலை குறித்து அறிவதற்காக யாழ். செயலக வட்டாரங்கள் நேற்று கொழும்புடன் தொடர்பு கொள்ள முயற்சித்த போதும் அது பலனளிக்கவில்லை என்று தெரியவந்தது. [உ-ஐ-9]

## மண் அள்ளி எடுப்பதை ஒழுங்குபடுத்த நடவடிக்கை

கரையோரங்களில் மண் அள்ளுவதால் ஏற்படும் அபாயத்தை தடுக்க ஏற்ற நடவடிக்கை எடுப்பதற்காக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அண்மையில் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் குறிப்பாக கல்லுண்டாய், காக்கைதீவு கரையோரங்களில் உள்ள உப்பளப் பகுதிகளில் (லாரி) மண் அள்ளுவதாலும், அரியாலை கிழக்கு கரையோரப் பகுதிகளில் மண் அள்ளுவதாலும் கடல் நீர் நாட்டுக்குள் வரும் அபாயம் ஏற்படும்.

அத்துடன் கடல்பெருக்கு ஏற்படும் காலத்தில் அள்ளும் இடங்களில் உவர்நீர் தேங்குவதால் அப்பகுதியை அண்மித்த இடங்களில் கிணறுகளின் நீர், உவர் நீராக மாறுவதோடு இவ்விடங்களில் பயன்தரு தாவரங்களும் உருவாக மாட்டா.

இவ்வாறான பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும்; மண் அள்ளுவதை ஒழுங்குபடுத்தவும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விவசாய சூழல் பாதுகாப்புப் பகுதி துறைசார் நிபுணர்களையும், யாழ். செயலக பிரதிநிதிகளையும் இணைத்து கலந்துரையாடியுள்ளது.

### சமாதான காலத்திலே ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
மருந்து வகைகள் போன்றவற்றை மாதம் இரண்டு அல்லது மூன்று முறைகளில் கப்பல்கள் மூலமாக அரசு இலவசமாக அனுப்பியது. தற்போதும் அனுப்பி வருகிறது. இவை உரிய முறையில் மக்களைச் சென்றடைய விடுதலைப் புலிகள் அனுமதிக்கிறார்களா என்பது குறித்து அரசுக்கு சந்தேகம் உள்ளது.

தங்களது உரிமைகளைப் பெற ஆயுதம் ஏந்த வேண்டிய அவசியமில்லை என்பதை தமிழ் மக்களுக்கு உணர்த்துவதற்காகவே நாம் அவ்வாறு செய்தோம். எமது முயற்சிகள் வெற்றியளித்தன.

மோதல் தவிர்ப்பை நாங்கள் மூன்றரை மாதம் பேணினோம்.

தொடர்பில்லாத விடயங்கள்

அரசியல் தீர்வு பற்றி நாங்கள் பேச முயன்ற போதெல்லாம் அதனுடன் தொடர்பில்லாத பல விடயங்களை முன்வைத்து விடுதலைப்புலிகள் அரசியல் தீர்வுக்கான பேச்சுக்களைத் தள்ளிப்போட்டனர்.

1994 டிசம்பர் மாதம் அரசியல் தீர்வொன்றைத் தயாரித்த எமது அரசு, தை முதலில் விடுதலைப்புலிகளிடம் முன்வைத்து அவர்களது கருத்தை அறிந்து, அதன் பின்னர் எமது அரசில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளுடனும் ஐ. தே. கட்சியுடனும் கலந்துரையாடவிருந்தது.

அரசின் தீர்வுத்திட்டத்தை நிறைவேற்ற விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பு அத்தியாவசியம் என்பதால் முதலில் அவர்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும் என நாங்கள் எடுத்த தீர்மானம் தவறானதல்ல.

மோதல் தவிர்ப்பு உடன்பாட்டிலிருந்து ஒருதலைப் பட்சமாக விலகி தாக்குதலை ஆரம்பித்ததன் மூலம், எமது அரசினால் மேற்கொள்ளப்பட்ட சமாதானமுயற்சிகளின் முதல் அத்தியாயம் புலிகளால் அழிக்கப்பட்டது.

தீர்வுத் திட்டத்தை மறுத்தனர்

எம்மால் தயாரிக்கப்பட்ட அரசியல் தீர்வுத் திட்டத்தை வாங்கி வாசிக்கக் கூட புலிகள் மறுத்தனர்

சமாதான முயற்சிக் காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு எல்லா விதத்திலும் மதிப்பளித்தோம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர்களை ஏமாற்ற முற்படவில்லை. இருப்பினும் விடுதலைப் புலிகளைப் பற்றி ஆழமாக அறிந்திருந்தோம்.

நாங்கள் சமாதான முயற்சிகளை மேற்கொண்ட 8 மாத காலத்தில் எந்தவிதத்திலும் எமது இராணுவத்தின் ஆற்றலைக் குறைக்க முற்படவில்லை; இராணுவத்திற்கு ஆட்கள் சேர்க்கப்பட்டனர் கடந்த அரசு இராணுவத்திற்கு வழங்காத உபகரணங்களை வெளிநாடுகளிலிருந்து பெற்று வழங்கினோம்.

புலிகள் மீண்டும் யுத்தத்தில் ஈடுபடுவார்கள் என்பதை நாங்கள் நன்கு அறிந்திருந்தோம்.

இராணுவத்தைத் தயார் செய்தோம்

சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பை வழங்குமாறு நாம் இராணுவத்தைக் கேட்டுக்கொண்டபோதிலும் எந்த நிலையையும் எதிர்நோக்கத் தயாராய் இருக்குமாறு இராணுவத்திற்குத் தெரிவித்திருந்தோம்.

யுத்தத்தைப் பிரகடனப்படுத்தித் தாக்குதலை மேற்கொண்டுவரும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பலவீனமான விதத்தில் எமது அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராயில்லை.

மீண்டும் யுத்தம் ஆரம்பித்த பின்னர் முதல் இரு வாரங்களில் அரச படைகளுக்கு சில பின்னடைவுகள் ஏற்பட்ட போதிலும் தற்போது பதில் தாக்குதல்களை மேற்கொள்ளக்கூடிய நல்ல நிலையில் இராணுவம் உள்ளது.

12 ஆண்டுகளாக நடைபெற்றுவரும் யுத்தத்தில் இராணுவத்திற்கு வழங்கப்படாத பல உபகரணங்களை எமது அரசு வழங்கியுள்ளது.

சமாதான முயற்சிகளில் ஈடுபட்ட எங்களை விடுதலைப் புலிகள் யுத்தத்திற்கு அழைத்துள்ளனர்.

சமாதானத்தின் மூலம் சமாதானத்தை உருவாக்க முடியாவிடின் வேறு எந்த வழியிலாவது சமாதானத்தை உருவாக்க எமது அரசு தயாராயுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சமாதானத்துக்கான யுத்தம்

எமது போர் சமாதானத்திற்கான போராகும். இப் போர் சமாதானத்தை விரும்பும் தமிழ் மக்களுக்கு எதிரான போரல்ல.

போர் சூழ்நிலையில் மனித உரிமை மீறல்கள், சித்திரவதைகள் போன்றவற்றை முடிந்தளவு மட்டுப்படுத்த தமிழ்க் கட்சிகள், நீதிபதிகள் அடங்கிய அதிகாரம் கொண்ட விசாரணைக் குழுவை அமைக்கவுள்ளேன்.

எமது சமாதான முயற்சிகளை உலகிலுள்ள பல்வேறு நாடுகள் ஆதரிக்கின்றன. விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை அயல்நாடுகள் மாத்திரமல்ல ஐரோப்பிய மேற்குலக நாடுகள் கூடக் கண்டிக்கின்றன. தோன்றியுள்ள நிலைமைக்கேற்ப எமக்கு பல்வேறு வழிகளில் உதவி செய்ய அவை முன்வந்துள்ளன.

அரசியல் தீர்வு தொடர்பாக அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை தற்போது ஆரம்பித்துள்ளோம். கட்சிகளின் அபிப்பிராயங்களைக் கேட்டறிந்த பின்னர் இன்னும் சில கிழமைகளுக்குள் அரசியல் தீர்வை மக்கள் முன்வைப்போம்.

தமிழ் மக்களுக்கு ஒரு வேண்டுகோள். முன்னர் உங்களது கோரிக்கைகளை நிறைவேற்ற எந்தவொரு அரசும் முன்வராத காரணத்தினால் ஆயுதமேந்த வேண்டிய நிலை உங்களுக்கு ஏற்பட்டது ஆனால் இன்றைய அரசு தமிழ மக்களின் நியாயமான உரிமைகளை வழங்கி அதிகாரத்தைப் பரவலாக்கத் தயாராயுள்ளது. இந்த நிலையில் போராட்டத்தை மேற்கொள்வது நியாயமற்றது. இதுபற்றி விடுதலைப் புலிகளுக்கு எடுத்துக்கூறுங்கள்.

புலிகள் எம்மீது தொடுத்துள்ள போரில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எமது படைகளைப் பலவீனப்படுத்தும் நோக்குடனோ காட்டிக்கொடுக்கும் நோக்குடனோ செயற்பட மாட்டேன் என உறுதியளிக்கிறேன்.

படை வீரர்களும் பெரும்பான்மைத் தமிழர்களும் விரும்பும் சமாதானத்தை, எதிர்க்கின்ற புலிகளுக்கு எதிரான யுத்தமாகவே இதைக் கருதவேண்டுமே ஒழிய, இதை எதுவிதத்திலும் தமிழர்களுக்கு எதிரான யுத்தமாகக் கருதக்கூடாது. — என்றார். (உ 10)

### வடக்கில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
நாட்டுத்தலைவர்களும் ஒன்று சேர்ந்து நடவடிக்கை எடுக்கக் கூடாது? —

ஏற்கனவே எங்களின் திறமைமிக்க தலைவர்கள் கொல்லப்பட்டு விட்டனர். ராஜீவ் கொல்லப்பட்டதை யிட்டு இந்தியா இன்னமும் சோகத்துடன் இருக்கிறது.—

பிரேமதாசாவுக்கும், ராஜீவ் காந்திக்கும் ஏற்பட்ட கதி சந்திரிகாவுக்கும், ராவுக்கும் உண்டாகக் கூடாது என்று பிரார்த்திப்போமாக! — என்றும் அந்த வாசகர் எழுதியுள்ளார். (அ)

இது உதயன் பப்ளிகேசன்ஸ் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 23-05-1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org